பக்கங்கள்: பதினான்கு


Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 02 வியாழக்கிழமை (16-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:172

# மீன்பிடிக் கட்டுப்பாடுகள் யாவும் அடுத்த வாரம் முற்றாக நீங்கும்?



நீண்டகாலமாக இடம்பெயர்ந்து வாழும் தங்களை சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்குமாறு கோரி வலி.வடக்கு பிரதேச மக்கள் நேற்று நடத்திய சாத்வீகப் போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

*மேலும் படங்கள் 14ஆம் பக்கத்தில். (படம்: தேவராஜன்)*

## பலாலியில் படை அதிகாரிகளுடன் கண்காணிப்புக் குழு நேற்று பேச்சு

யாழ்ப்பாணம்,மே16

**வடக்குக் கடலில் இரவிலும் பகலிலும் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி எதிர்வரும் 24ஆம் திகதி முதல் முற்றாக நீக்கப்படும்.**

**மீன்பிடிக் கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பான விவரங்கள் படைத் தலைமையகத்தில் இருந்து அடுத்தவாரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்று தெரியவருகிறது.**

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து 90 தினங்கள் பூர்த்தியடையும் போது மீன்பிடிப்பதற்கான கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்பட்டிருக்கவேண்டும்.

இதன்படி புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் 24ஆம் திகதியுடன் 90 தினங்களைப் பூர்த்தி செய்கின்றது.

வடக்கில் தற்போது ஓரளவு தளர்த்தப்பட்டிருக்கும் கடற்றொழில் கட்டுப்பாடுகள் அன்றைய தினத்துடன் முற்றாக நீக்கப்பட்டுவிடவேண்டும்.

மீன்பிடிக் கட்டுப்பாடுகள் நீக்கம் தொடர்பாக யாழ்.மாவட்ட கண்

(14ஆம் பக்கம் பார்க்க)

### வலி.வடக்கில் குடியமர அனுமதிக்கக் கோரி

## ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அடையாள உண்ணாவிரதம்!

வலி.வடக்கு,மே16

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்கு மீளச் சென்று குடியமர அனுமதிக்குமாறு கோரி நேற்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக்காலை 8 மணிக்கு கூடிய ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள், முதியோர், குழந்தைகள் அங்கு அமர்ந்து உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரியும், தமது சொந்த மண்ணில் விவசாயம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரியும் வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.

வலி.வடக்குப் பகுதியைச் சேர்ந்த 20இற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து இந்தப் போராட்டத்தை

(14ஆம் பக்கம் பார்க்க)

### சமாதான குதிரைப் பவனி நேற்று வருகை

தென்மராட்சி,மே16

சமாதானத்தையும் இனசௌஜன்யத்தையும் வலியுறுத்தி சமாதான குதிரைப் பவனி நேற்று ஏ-9 கண்டி வீதி ஊடாக யாழ்ப்பாணம் வந்தது.

கொழும்பில் இருந்து புறப்பட்ட இந்தப் பவனியில் மூன்று குதிரைகளுடன் வாகன அணி ஒன்றும் வந்தது.

இரு பெண்கள் குதிரைகளில் அமர்ந்து கையசைத்தவாறு வந்தனர்.

கண்டி வீதியின் இருமருங்கும் காணப்பட்ட மக்கள் குதிரைச் சவாரியை வரவேற்றனர். (ஐ-117-31)

## புலிகள் – படையினர் நேற்று ஓமந்தையில் சந்திப்பு!

வவுனியா,மே16

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிகளும் படை அதிகாரிகளும் நேற்று ஓமந்தையில் இரண்டாவது முறையாக நேருக்குநேர் சந்தித்தனர்.

ஓமந்தை முன்னரங்க மையப் பகுதியில் நேற்று நண்பகல் 12மணிமுதல் ஒரு மணிவரை இந்தச் சந்திப்பு நடந்தது.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறை பிரதிநிதிகளான தங்கன, புலித்தேவன், தயாநிதி ஆகியோரும் -

படைத்தரப்பில் வவுனியா 211 ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் ஜொ! டி.அல்விஸ், போக்குவரத்துக்குப் பொறுப்பான அதிகாரியான கப்டன் ராஜபக்ஷ ஆகியோரும் -

நேற்று சந்தித்து உரையாடினர்.

ஓமந்தை ஊடான போக்குவரத்துக்களை காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை அனுமதிக்குமாறு புலி

(14ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிச் சேவைகள் சில தினங்களில் சீராகும்

யாழ்ப்பாணம்,மே16

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான நுண்அலையூடான தொலைபேசி சேவை அடுத்த சில தினங்களில் சீராகும் என்று ரெலிக்கொம் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள ரெலிக்கொம் நிறுவனத்தின் கோபுரத்தில் 'றிபீட்டர்' கருவி பொருத்தும் பணி இன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்தப் பணி நாளை பூர்த்தியடைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள கோபுரத்துக்கும் மன்னாரில் உள்ள கோபுரத்துக்கும் இடையில் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் சேவை சீராகும் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை -

3ஆயிரம் புதிய தொலைபேசி இணைப்புக்கள் வழங்கக்கூடிய பரிவர்த்தனை நிலையத்துக்கான உபகரணங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன என்றும் -

ஜுன் மாத இறுதிக்குள் இந்தப் பணி பூர்த்தியடையும் என்றும் - அவர் சொன்னார். (ஐ-3)

## 'Z ஸ்கோர்' பல்கலைக்கழக அனுமதியால் யாழ். மாவட்டத்துக்கு பாதிப்பு இல்லை!

யாழ்ப்பாணம்,மே16

ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகிறது. கொழும்புக்கு அடுத்தபடியாக யாழ்.மாவட்டமே முன்னணியில் உள்ளது.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'இசற்'(Z) ஸ்கோர் முறைப்படி பல்கலைக்கழக அனுமதியில் யாழ். மாவட்டத்தின் நிலை எப்படி உள்ளது என்று கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய சூழ்நிலையில் குடாநாட்டு மாணவர்களின் கல்வித் தரம் திருப்தியாகவே அமைந்துள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த வெட்டுப்புள்ளி முறையால் எமது மாணவர்களுக்கு பாதிப்புகள் எதுவும் ஏற்படவில்லை. இதற்கு முக்கியமான மூன்று காரணிகள் எமக்குச் சாதகமாக அமைந்துள்ளதைக் குறிப்பிடலாம். அதாவது:-

★ யாழ். மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழக அனுமதிக்கு மாண

(14ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



...அடிக்கடி இப்படித்தான் சொல்லுகினம்... ஆனால் தொலைபேசித் தொல்லை தீர்ந்தபாடில்லையே....

### அமைச்சர் மொறகொட இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,மே16

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொறகொட இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

குடாநாட்டு நிலைமைகளை நேரில் அறிவதற்காக அமைச்சு அதிகாரிகள் சகிதம் அவர் இந்த விஜயத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் தீவுப்பகுதியில் காணப்படும் நிலைவரத்தை நேரில் பார்வையிடுவதே அமைச்சரது விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)



நேற்று நடைபெற்ற செலான் வங்கித் திறப்பு விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களில் ஒரு பகுதியினர்



செய்தியாளர் மாநாட்டில் செலான் வங்கி அதிகாரிகள்.



செலிங்கோ கூட்டு நிறுவனங்களின் தலைவர் தேசமான்ய லலித் கொத்தலாவல செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகிறார்.



புதிய வாடிக்கையாளர் ஒருவருடன் பணக் கொடுக்கல் வாங்கல்.




யாழ்நகரில் ஆஸ்பத்திரி வீதியில் நேற்று திறந்துவைக்கப்பட்ட செலான் வங்கிக் கட்டடத்தின் தோற்றம்



ஸ்ரான்லி வீதியில் செலிங்கோ இன்சூரன்ஸ் கிளை.

# குடாநாட்டைப் புனரமைப்பதற்கு செலான் வங்கி தோள்கொடுக்கும்

## தேசமான்ய லலித் கொத்தலாவல தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மே16

குடாநாட்டில் யுத்தத்தினால் சேதமாக்கப்பட்ட, அழிக்கப்பட்ட வீடுகள், வர்த்தக நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்ப தேவையான உதவிகளை செலான் வங்கியும் அதனோடு இணைந்த நிறுவனங்களும் வழங்கும். இதே உதவி இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கும் கிடைக்கும்.

செலிங்கோ நிறுவனத் தலைவர் தேசமான்ய லலித் கொத்தலாவல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது நிறுவனத்தின் 91ஆவது கிளையாக யாழ்ப்பாணக் கிளையை நேற்றுக் காலை திறந்துவைத்த பின்னர் செய்தியாளர் மாநாடு ஒன்றை சென்ஜோன்ஸ் கல்லூரியில் நடத்திய சமயமே அவர் இதைத் தெரிவித்தார்.

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கையில் வெளியிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

வடக்கில் கடந்தகால இராணுவ நடவடிக்கையால் சேதமாக்கப்பட்ட - அழிக்கப்பட்ட - வீடுகள், வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றை மீளக் கட்டியெழுப்பத் தேவையான நிதி உதவியை வழங்குவதே இங்கு எமது நிறுவனப் பணியை விஸ்தரித்ததன் நோக்கமாகும். வீடமைப்புத் திட்டங்கள், வர்த்தக மையங்கள் ஆகியன இங்கு அமுல் செய்யப்படும்.

★ பெண்கள் சுயதொழில் வாய்ப்பை மேற்கொள்ள கடன் உதவிகள் வழங்கப்படும். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

★ குழந்தைகளுக்கான மருத்துவ, கல்வி வசதிகளுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும்.

★ வங்கி திறக்கப்பட்டவுடனேயே 30 பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்புக் கடன் வழங்கப்பட்டுள்ளது, மேலும் நானூற்றுஐம்பது பேருக்கு கடன் வழங்கப்படவிருக்கின்றது.

★ ஒரே இடத்தில் வீட்டையும் கடையையும் அமைக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவிருக்கின்றோம்.

★ வடக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்களுக்கும் எமது நிறுவனத்தின் பணி விஸ்தரிக்கப்படும்.

குடாநாட்டில் கிடைக்கும் நிதியத்தை தெற்கே எடுத்துச் சென்று முதலீடு செய்யமாட்டோம். இங்கு கிடைக்கும் நிதியை எமது ஏனைய நிறுவனங்கள் மூலம் இங்குள்ள மக்களுக்கே முதலீடு செய்வோம். தேவை ஏற்படின் தெற்கில் இருந்து இங்கு நிதியை எடுத்து வருவோம். (ஜ-3-8)

# மாட்டின் கயிற்றில் சிக்கி தடம் புரண்டது ஓட்டோ!

யாழ்ப்பாணம்,மே16

வீதியின் குறுக்கே கட்டப்பட்டிருந்த மாட்டின் கயிற்றில் சிக்கிய ஓட்டோ தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த இருவர் காயமடைந்தனர்.

நல்லூர் கோயில் வீதிப் பகுதியில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் ஓட்டோ சாரதியான ராஜரட்ணம் விஜயன் (வயது48 - கல்வயல், சாவகச்சேரி) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோவில் பயணம் செய்த மற்றைய நபர் தலையில் ஏற்பட்ட காயத்திற்கு தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளார்.

இவர்கள் பயணம் செய்த ஓட்டோவும் சேதமடைந்துள்ளது.

இதேவேளை -

வீதியோரங்களில் நீண்ட கயிற்றில் கட்டப்படும் கால்நடைகளால் பல வீதி விபத்துக்களில் அடிக்கடி ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஜ-6-9-12-ரி)

# இத்தாலிய முகாமிலிருந்து 42 இலங்கையர் தப்பினர்!

கொழும்பு,மே16

இத்தாலியில் சட்ட விரோதக் குடியேறிகளை தடுத்து வைத்திருந்த முகாமிலிருந்து 42 இலங்கையர்கள் தப்பிச் சென்று தலைமறைவாகி விட்டதாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நீர்கொழும்புக் கரையிலிருந்து புறப்பட்ட படகொன்றை இத்தாலியக் கடற்பரப்பில் வைத்து அந்நாட்டு அதிகாரிகள் சோதனையிட்டதாகவும் - அப்போது இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழையும் எண்ணத்துடன் அந்தப் படகில் பயணித்த நூறு இலங்கையர்களையும் கைது செய்த அதிகாரிகள் அவர்களைத் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைத்ததாகவும் -

கூறப்பட்டது.

அந்தத் தடுப்பு முகாமிலிருந்த இலங்கையரில் 42 பேரே தற்போது தப்பிச் சென்றுள்ளனர்.

முகாமில் இருந்தவர்களின் பட்டியலை சரிபார்த்த போதே 42 பேர் தப்பிச் சென்றுள்ளது தெரிய வந்ததாக இத்தாலிய அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ)

# கோஷ்டி மோதலில் ஐவருக்கு வாள் வெட்டு!

யாழ்ப்பாணம்,மே16

நாவாந்துறைப் பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் படுகாயமடைந்த ஐவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட நாள்களாக இருந்துவந்த பிணக்கு நேற்று வாய்த்தர்க்கத்தில் ஆரம்பித்து வாள் வெட்டில் முடிவடைந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

நாவலர் வீதி, நாவாந்துறையைச் சேர்ந்த சின்னத்தம்பி றொக்சன் (வயது21), அதே இடத்தைச் சேர்ந்தவர்களான பர்னாந்து அமலதாஸ் (வயது20), ஜோகராசா விஜிதரன் (வயது15), மார்க்கண்டு மகேஸ்வரன் (வயது23), இதயநாதன் சந்திரகுமார (வயது 23) ஆகிய 5 பேருமே வாள் வெட்டுக்கு இலக்கானவர்கள் ஆவர்.

இதேவேளை -

இந்த மாதத்தில் மட்டும் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற கோஷ்டி மோதல்களில் சுமார் 40இற்கும்-மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (ஜ-6-9-12-ரி)

# செலிங்கோ கூட்டு நிறுவனங்களின் கிளைகள் நேற்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,மே16

செலிங்கோ நிறுவனத்தின் கீழ் இயங்கும் செலான் வங்கி உட்பட பதினொரு வர்த்தக நிறுவனங்களின் கிளை அலுவலகங்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டன.

ஆஸ்பத்திரி வீதியில் செலான் வங்கியின் கிளையை நேற்றுக் காலை 9.30மணியளவில் செலிங்கோ நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய லலித் கொத்தலாவல திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சமயப் பெரியார்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், வர்த்தப் பிரமுகர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

அதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதியில் செலிங்கோ ரவல்ஸ் அலுவலகமும், ஸ்ரான்லி வீதியில் த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட், செலிங்கோ இன்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட், எவ் அன் ஜி புறப்பட்டி டெவலப்பர்ஸ், செலிங்கோ கிறமின், கிறடிற் கம்பனி லிமிட்டெட் ஆகியவற்றின் அலுவலகங்களும் திறந்து வைக்கப்பட்டன.

பின்னர் நடந்த ஒரு வைபவத்தில் யாழ்.வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகளை தேசமான்ய லலித் கொத்தலாவல சந்தித்துக் கலந்துரையாடினார். மாலையில் அவர் கொழும்பு திரும்பினார். (ஜ-3-8)

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு!

யாழ். பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட ஜே/68, ஜே/ 66,ஜே/79,ஜே/75,ஜே/72,ஜே/83 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்கள் இடம்பெயந்தோருக்கான பதிவுகளை நாளைக்குள் பதிவு செய்து கொள்ளுமாறு இது தொடர்பான சமுர்த்தி அலுவலர்கள் கேட்டுள்ளனர்.

கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக பதிவு செய்யும் படிவங்கள் விநியோகிக்கப்படும் இடங்கள் வருமாறு:-

ஜே/66-பழைய கிராம சேவையாளர் அலுவலகம், ஈச்சமோட்டை வீதி.

ஜே/68-சென்ரோக்ஸ் சனசமூக நிலையம், குருநகர்.

ஜே/72-சின்னக்கடை,குருநகர்.

ஜே/75- கிராம சேவகர் அலுவலகம், குருசோர் வீதி, சுண்டிக்குளி.

ஜே/79-இல.15, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி.

ஜே/83-சீனிவாசன் வீதி, கொட்டடி. (ஒ)


உ
சிவமயம்
முத்துமாரி அம்மன் துணை

**காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி**

**ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில்**

**சித்திரபானு வருட**

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

*அம்பிகை அடியார்களே!*

வைகாசி மாதம் 3ஆம் நாள் நாளை (17.05.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்ற உற்சவம் ஆரம்பித்துத் தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. ஆகவே அடியார்கள் அனைவரும் அம்பாளின் திருவருள் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- காலை 8.00 மணிக்கு பகல் திருவிழா ஆரம்பமாகும். மாலை 6.00 மணிக்கு இரவுத் திருவிழா நடைபெறும். கொடியேற்றம் (17.05.2002 வெள்ளி), தீர்த்தம் (26.05.2002 ஞாயிறு) என்பனவற்றின் கிரியைகள் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும். தேர்த்திருவிழாவின் (25.05.2002 சனிக்கிழமை) கிரியைகள் அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.
- திருவிழாக்களின் பத்து நாள்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(C/22150) ஆலய அறங்காவலர் சபை.

உதயன்

## அரசாங்கத்தின் மீது எழுந்துள்ள சந்தேகம்!

சமாதான முன்னெடுப்புக்களை முறியடிக்கும் முயற்சிகளில் பேரினவாத சகதியில் ஊறிப்போன கட்சிகள், குறிப்பாக சிஹல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணி- இவற்றுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றன.

அதில் ஆச்சரியம் இல்லை; எதிர்பார்க்கக் கூடியது தான். ஆனால், அரசும்கூட அதேவழிக்குத் திரும்புவதான தோற்றப்பாடு இப்போது தெரிகிறதே, நம்பமுடிகிறதா?

போரினால் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. சமாதானத்தைக் கொண்டுவர முடியாது. அழிவுகளையும் மக்களின் அவலங்களையும் தவிர்த்து நாட்டின் சரிந்துபோன பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தவும், கட்டியெழுப்பவும் போரை நிறுத்தி புலிகளுடன் பேச வேண்டும்.

இந்த முடிவுடன்தான் ரணில் விக்கிரமசிங்க பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, மக்களின் ஆணையைப் பெற்று, ஆட்சியைக் கைப்பற்றினார்.

பதவிக்கு வந்ததும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிரந்தர போர் நிறுத்தத்திற்காக புலிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொண்டார்.

போரை நிறுத்துவதோடு வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தி பேச்சு நடத்துவதற்கான புறச் சூழலைத் தோற்றுவிப்பதையும் நோக்கமாகக் கொண்டது இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை.

உடன்படிக்கைப்படி இதுவரை சில காரியங்கள் நடந்திருப்பது உண்மை. எனினும் நடக்கவேண்டிய காரியங்கள் இன்னும் எத்தனையோ உள்ளன.

அப்படியிருக்க, உடன்படிக்கையை மீறும் செயல்களில் முப்படைகளும் ஈடுபட்டு வருகின்றன. புலிகள் இதுபற்றி சர்வதேசக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள்.

அதேவேளை, படையினர் புலிகள் மீது புகார் கூறுகிறார்கள். கண்காணிப்புக் குழுவுக்கும் விடயம் சென்றுவிட்டது.

கண்காணிப்புக் குழு விசாரணை நடத்திவிட்டு எந்தத் தரப்பினராவது புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறினார்களா, இல்லையா என்று தீர்ப்பைக் கூறும். அவ்வளவே, குழுவின் பணி முடிந்துவிடும்.

அதுபோகட்டும், முப்படைகள் மட்டுமன்றி அரசும் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையில் நடந்துகொள்கிறதே!

உதாரணத்துக்கு சமீபத்தில் நடந்த இரண்டு சம்பவங்களைக் குறிப்பிடலாம்.

ஒன்று - இருவாரங்களுக்குள் அடுத்தடுத்து கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த இரண்டு அமெரிக்க யுத்த நாசகாரிக் கப்பல்கள்.

இரண்டு - வன்னி வானில் பறந்து வேவு பார்த்த ஆளில்லா விமானங்கள்.

யுத்த காலத்தில் வேவு பார்க்கும் விமானங்களுக்கு சமாதான காலத்தில் அதுவும் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறையில் இருக்கும் வேளையில் என்ன வேலை? எதற்காக மக்களை அச்சமடையச் செய்ய வேண்டும்? எதற்காகப் புலிகளைத் தாக்குதல் நடவடிக்கைகளுக்குத் தூண்டவேண்டும்? சமாதானத்தில் அரசுக்கும் நம்பிக்கை இல்லாமல் போகிறதா என்ற கேள்வி எழுகிறது.

அடுத்த விடயம் அமெரிக்க யுத்த நாசகாரிக் கப்பல்களின் வருகை.

முதலில் வந்த கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காக வந்தது என்று கூறப்பட்டது. சரி இடைநடுவில் எரிபொருள் தீர்ந்துவிட்டால் நிரப்புவதற்கு கொழும்பை விட வேறு இடம் இல்லையா?

இரண்டாவது கப்பல் நல்லெண்ண விஜயம் செய்தது என்று விளக்கம் அளிக்கப்பட்டது. அமெரிக்க யுத்தக் கப்பல்தான் நல்லெண்ண விஜயத்தை மேற்கொள்ள வேண்டுமா? அதுவும் புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறுகிறார்கள் என்று புகார் கூறப்படும் வேளையில்.

இந்த அமெரிக்க யுத்தக் கப்பல்கள் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் தரித்து நின்றே இலங்கைக் கடற்பகுதியைக் கண்காணிக்கக் கூடிய சக்தி வாய்ந்தது.

அமெரிக்க ஏவுகணை நாசகாரிக் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்துக்கு வரவழைத்து தமிழீழ விடுதலைப் புலிகளை அரசாங்கம் அச்சுறுத்த முயல்கிறது என்று புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

அரசும் கூட சமாதானத்தில் நம்பிக்கை இழந்துவிட்டதா? பேச்சு நடத்துவதில் கரிசனை அற்றதாகி விட்டதா என்றெல்லாம் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அவர் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்களும் அரசின் சொல்லிலும் செயலிலும் வேறுபாடு கண்டு அவநம்பிக்கை கொள்கிறார்கள்.

அரசு உடனடியாக நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

## ஞாயிறு தவிர்ந்த தினங்களில் முகமாலை ஊடாகவும் போக்குவரத்து இனிமேல் காலை 6 மணிக்கு ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,மே16

முகாமாலையூடான ஏ-9 வீதிப் போக்குவரத்து ஞாயிறு தவிர்ந்த தினங்களில் காலை 6 மணிதொடக்கம் பிற்பகல் 5 மணிவரை அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ் பாதுகாப்பு நடவடிகைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில்:-

பொதுமக்களின் பாவனைக்காக ஏ-9 வீதிச் சோதனைச் சாவடி திறக்கப்பட்டிருக்கும் நேரம் பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

ஞாயிறு தினங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 6 மணிமுதல் மாலை 5 மணிவரை.

இந்த வீதியில் சோதனைச் சாவடியூடாகப் பயணிகள் பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் உட்பிரவேசிக்கவோ, வெளியேறவோ செய்வதன்மூலம் மாலை 5 மணிக்கு முன்பதாக பாதுகாப்பற்ற பகுதிகளை அவர்கள் கடந்துசெல்ல இலகுவாக இருக்கும்.

முகமாலையில் உள்ள வீதிச் சோதனைச் சாவடியின் ஊடாக உட்பிரவேசிக்கும் மக்கள், அப்பகுதிகளில் செல்லும் போது பாதுகாப்புப் படையினரால் இன்னமும் கண்ணிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களுக்குச் செல்லவேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் அனுமதியின்றி அப்பிரதேசங்களுக்குச் சென்ற மக்களில் சிலர் கண்ணிவெடிகளில் சிக்கியுள்ளனர். எனவே, அத்தகைய பகுதிகளுக்குச் செல்ல உத்தேசிக்கும் மக்கள் அப்பகுதி அயலவர்களிடமோ அல்லது இராணுவ முகாமிலோ கேட்டுக்கொள்ளவும் -

என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## எமது விடுதலையை வலியுறுத்த எழுச்சிப் போராட்டம் அவசியம்

### களுத்துறைத் தமிழ்க்கைதிகள் அறிக்கை

கொழும்பு,மே16

எமது விடுதலையை வலியுறுத்தி எழுச்சிப் போராட்டங்களை அனைவரும் ஒன்றுதிரண்டு நடத்த வேண்டும்.

- இவ்வாறு களுத்துறை சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனா.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்றைய சூழ்நிலையில் பொது அமைப்புக்கள் மற்றும் மனித உரிமைஅமைப்புக்கள் ஒன்றுபட்டு தமிழ்க் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி எழுச்சிப் போராட்டங்களை நடத்துவதன் மூலமே எமது விடுதலையை துரிதப்படுத்தமுடியும்.

எமது விடுதலை தொடர்பாக நாம் இதுவரை பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளோம். ஆனால் அவை ஒன்றுமே பலனளிக்கவில்லை.

அரசியல்வாதிகள் கொடுத்த வாக்குறுதிகளும் இதுவரை பூரணமாக நிறைவேற்றப்படவில்லை - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் பிரதேசங்களில் நடத்தப்படவுள்ள உணர்வுப் போராட்டங்களில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையும் வலியுறுத்தவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-6-12)

## 'வெசாக்' தினத்தன்று சமாதானத்தை வலியுறுத்தி கண்டியில் பிரார்த்தனை

கொழும்பு,மே16

'வெசாக்' தினமான எதிர்வரும் 26ஆம் திகதி கண்டியில் 10 ஆயிரம் பாடசாலை மாணவ, மாணவிகள் ஒன்றிணைந்து சமாதான முயற்சிகள் வெற்றிபெற பிரார்த்தனை மற்றும் பாதயாத்திரையை மேற்கொள்ளவுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகள் வெற்றி பெறவும், அனைத்து இனமக்களும் ஒற்றுமையுடன் வாழ வேண்டியுமே இந்த நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். இதில் அனைத்து மத மாணவர்களும் ஒன்றிணைந்து மும்மத வழிபாட்டுத் தலங்களிலும் வழிபாடுகளைச் செய்த பின்னர் போகந்தரபுரவிற்கு ஊர்வலமாகச் சென்று அங்கு பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்துவர். (ஒ-6-12)

## பிறப்பு, இறப்பு சான்றிதழ் படிவங்களுக்குத் தட்டுப்பாடு

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களுக்கு யாழ். செயலக பதிவாளர் பிரிவில் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகிறது. இதனால் பொதுமக்கள் அவற்றை வெளியாரிடம் அதிகளவு பணம் கொடுத்து வாங்க நேரிட்டுள்ளது.

அண்மை நாள்களாக யாழ்.செயலகத்தில் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களின் பிரதிகளை பெறுவதற்காக விண்ணப்பிப்போர் தொகை பெருமளவில் அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பாக தரைவழிப் பாதை திறக்கப்பட்ட பின்னர் குடாநாட்டுக்கு வெளியே வசிப்பவர்களிடமிருது இதற்கான விண்ணப்பங்கள் வந்து குவிவதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தநிலையில் யாழ்.செயலகத்தில் விண்ணப்பப் படிவங்கள் முடிவடைந்துவிட்டன என கடந்த சில நாள்களாகத் தெரிவிககப்பட்டு வருகிறது.

இதனால் பொதுமக்கள் செயலகத்துக்கு வெளியே சிலரிடம் மேற்படி விண்ணப்பப் படிவங்களை பெருமளவு பணம கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-9)

### நாளை

வைகாசி 03
வெள்ளிக்கிழமை
(17.05.2002)
திதி : பஞ்சமி
பிற்பகல் 3.20 வரை.
நட்சத்திரம்: புநர்பூசம்
பிற்பகல் 4.50 வரை.
சுபநேரம் : 5.53 - 7.23
ராகுகாலம்: 10.23 - 11.53
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பணக்காரனாக இருப்பதைவிட பணக்காரனாக வாழ்வதே சிறப்பானதாகும்.

## நாட்டில் வறுமையை ஒழிக்க திட்டமிடல் திணைக்களம் நடவடிக்கை

வலி.மேற்கு, மே16

வறுமையை ஒழிக்கும் நோக்கில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களை அதிகமாகக் கொண்ட கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு அங்கு வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

தேசிய திட்டமிடல் திணைக்களம் இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சகல பிரதேச செயலர் பிரிவுகளிலுமிருந்து அபிவிருத்திச் செயல்முறையில் விடுபட்ட மூன்று கிராமங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்து விவரங்களை அனுப்பிவைக்குமாறு தேசிய திட்டமிடல் திணைக்களம் சகல மாவட்ட அரச அதிபர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

பங்கேற்பு கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வறுமையான குடும்பங்களை அதிகமாகக் கொண்ட கிராமங்கள் பற்றிய தொகுப்பு ஒன்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் வெளியிடப்படவுள்ளது.

பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தெரிவுசெய்யப்படும் மூன்று கிராமங்களும் முன்னுரிமை அடிப்படையில்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கீகாரத்துடன் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராமங்களின் மொத்த குடும்பங்கள், மொத்த சனத்தொகை, இவற்றுள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் இடம் பெற வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-175)

## புலிகளிடம் நிர்வாகம் வந்தால் அது இந்தியாவுக்கு ஆபத்து!

### சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்

சென்னை,மே16

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியின் இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் வந்தால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு நேரடியான அச்சுறுத்தலாக - பெரும் ஆபத்தாக - இருக்கும்.

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சென்னையில் செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகம் ஏற்படுத்தப்படுவதை இந்திய மத்திய அரசு தலையிட்டுத் தடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார். (ஐ)

## 7 படையினருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,மே16

கடந்த வருடம் நவம்பர் மாதம் மீசாலை அல்லாரையில் உள்ள முகாம் பகுதியில் சித்தசுவாதீனமற்ற இளைஞர் ஒருவரைச் சுட்டுக்கொன்ற சம்பவம் தொடர்பாக அந்த முகாமைச சேர்ந்த 7 படையினரைக் எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி பதில் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த இளைஞரின் மரண விசாரணையின் பின், குறித்த மரணம் படையினரால் ஏற்படுத்தப்பட்டதாக முடிவு செய்து ஏழு படையினரையும் குறித்த நபரின் மரணத்தை ஏற்படுத்தியதற்காகக் கைது செய்யுமாறு நீதிவான் பணித்துள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த பரராசசிங்கம் பரமேஸ்வரன் என்னும் இளைஞரே இச்சம்பவத்தில் இறந்தவராவார்.

இந்த இளைஞர் முகாமைத் தாக்க வந்த விடுதலைப் புலிகள் உறுப்பினா எனப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டபோதிலும் இறந்தவரின் தந்தையார் படையினரின் கூற்றை மறுத்து இவர் சித்தசுவாதீனமற்றவர் எனவும் இவா முகாமுக்குச் சென்று வேலை செய்பவர் எனக் குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே. (ம-117)

## தமிழும் தமிழரும் அழியும் நிலையில் இதுவே தலைவர் பிரபாவின் கவலை

### சந்திரசேகரன் தெரிவிப்பு

கொழும்பு,மே16

உலகில் அழிந்துவரும் மொழிகளில் தமிழும், அழியும் இனத்தில் தமிழினமும் பட்டியலிடப்படும் நிலை வந்திருப்பதை தமிழீழத் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் என்னிடம் சுட்டிக் காட்டினார்.

- இவ்வாறு அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

"எமது இனத்தையும் மொழியையும் பாதுகாக்க தேசிய, சர்வதேச ரீதியில் உலகத் தமிழர்கள் ஒன்றுபடவேண்டிய காலம் வந்துள்ளது.

வடக்கு - கிழக்கு, மலையகம்,மேல்மாகாணம் என்று தமிழர் பிளவுபடும்நிலை முடிவுற்று புதிய தமிழ்த் தேசியம் உருவாக்கப்பட வேண்டும்.

வாழுகின்ற பிரதேசம் வேறுபட்டாலும் நாம் எல்லோரும் இனத்தாலும் ,மொழியாலும் தமிழர்கள் ஒன்றுபட்டவர்கள்."

என்று அவர் தெரிவித்தார். (ஒ-6-12)

# வீட்டுப் பாடம் செய்யாத மாணவனுக்கு 160 அடி!

## மலேசியாவில் சம்பவம்

கோலாலம்பூர்,மே16

வீட்டுப்பாடம் செய்யாத மாணவனின் கன்னத்தில் சக மாணவர்களைக் கொண்டு 160 தடவைகள் அடித்த ஆசிரியை பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார்.

மலேசியாவின் சீனப் பாடசாலை ஒன்றில் கற்கும் ஓங் ஜியாஹு" என்ற 10 வயது மாணவன் தனக்குத் தரப்பட்ட வீட்டுப் பாடங்களை செய்யாமல் பாடசாலைக்குச் சென்றான்.

இதனால் ஆத்திரமடைந்த வகுப்பாசிரியை 'என்னிடம் பிரம்படி வாங்குகிறாயா? அல்லது சக மாணவனை விட்டு கன்னத்தில் அடிக்கச் சொல்லட்டுமா?' என்று கேட்டார்.

அதற்கு அந்த மாணவன் 'சக மாணவனே அடிக்கட்டும்' என்று கூறியுள்ளான். ஆனால், ஆசிரியையோ, வகுப்பில் இருந்த மற்றைய 40 மாணவர்களைக் கொண்டு தலா 4 முறை என 160 தடவைகள் அந்த மாணவனின் கன்னத்தில் அடிக்கச் செய்துள்ளார்.

தொடர்ந்து கன்னத்தில் அடிவாங்கியதால் மாணவனின் முகம் வீங்கிவிட்டது. இது குறித்து மாணவனின் பெற்றோர் பாடசாலை நிர்வாகத்திடம் முறையிட்டதையடுத்து சம்பந்தப்பட்ட ஆசிரியை பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். (ஒ)

# தெ.ஆபிரிக்காவின் முதல் தமிழ்ப்படம்

டர்பன்,மே16

தென் ஆபிரிக்காவில் முதல் தடவையாக ஒரு தமிழ்ப் படம் தயாரிக்கப்படுகிறது.

அங்கு வசிக்கும் டீஸ்பிள்ளை என்பவரும் அவரது மகள்மாரான பிராலோஷினி (வயது 26), கராசி (வயது 24) ஆகியோரும் சேர்ந்து இந்தப் படத்தைத் தயாரிக்கின்றனர். 'நாளை' என்ற பெயரிட்டுள்ள இந்தப் படத்தில் கராசி கதாநாயகியாக நடிக்கிறார்.

தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த மொடல் அழகி ஒருவர் இந்தியாவின் தமிழகத்துக்குச் சென்று புகழ்பெறுவதைக் கதையாகக் கொண்ட இந்தத் திரைப்படம், அடுத்த மாதம் உலகெங்கிலும் திரையிடப்படவுள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழரான டீஸ் பிள்ளையின் முன்னோர் தமிழகத்திலிருந்து தென் ஆபிரிக்காவில் சென்று குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஜோர்டானில் பெண்களுக்கு விவாகரத்துப் பெறும் உரிமை

ஜோர்டானில் முதல்முறையாக இஸ்லாமியப் பெண் ஒருவருக்கு அவரது கணவரிடமிருந்து விவாகரத்து வழங்கப்பட்டுள்ளது.

பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளில் முஸ்லிம் பெண்கள் விவாகரத்துக் கோருவதற்கு சட்டத்தில் இடமில்லை. இஸ்லாமிய நாடான ஜோர்டானில் இந்த ஆண்டின் தொடக்கத்தில்தான் பெண்கள் விவாகரத்துக் கோருவதற்கு வழிசெய்யும் வகையில் புதிய சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டது.

புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட சில நாள்களில் பெயர் வெளியிடப்படாத பெண் ஒருவர் தனது கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுத்தருமாறு கோரி நீதிமன்றத்தை அணுகினார்.

3ஆண்டுகளின் முன்னார் திருமணமான தன்னை தற்போது தனது கணவர் வெறுப்பதாகவும் -

ஆகவே தனக்கு விவாகரத்து வழங்கும்படியும் -

அந்தப் பெண் நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

இதனை விசாரித்த நீதிபதி, திருமண சமயத்தில் இஸ்லாமிய முறைப்படி கணவரிடமிருந்து அந்தப் பெண் பெற்ற சீதனத்தொகையை திருப்பிச் செலுத்தி விடும்படி உத்தரவிட்டு விவாகரத்து வழங்கினார். (ஒ)



தாய்லாந்தில் நேற்று திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 6.2புள்ளியாகப் பதிவானது. தலைநகர் தாய்பேய்யிலுள்ள காலநிலை அவதானிப்பு நிலையத்தில் உள்ள ரிச்டர் அளவுகோலில் நிலநடுக்கத்தின் அளவு பதிவாகியிருப்பதை அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டுகிறார். பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

# தாய்லாந்தில் அமெரிக்கா இராணுவ போர்ப் பயிற்சி

பாங்கொக்,மே16

ஆசிய - பசுபிக் பகுதியில் ஒவ்வொரு வருடமும் அமெரிக்கா மற்ற நாடுகளுடன் இணைந்து தனது ராணுவத்துக்கு போர்ப் பயிற்சிகள் அளிப்பது வழக்கம். இந்த வருடம் தாய்லாந்து நாட்டில் அமெரிக்கா போர்ப் பயிற்சியை தொடங்கியுள்ளது. இதில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் பங்கேற்கின்றனர்.

வழக்கமான பயிற்சிகளுடன் தீவிரவாதத்தை எதிர்த்து எவ்வாறு போர் நடத்துவது என்றும் ராணுவ வீரர்களுக்கு பயிற்சி தரப்படுகிறது. செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்காவில் நடந்த சம்பவத்தை அடுத்து இதில் அமெரிக்கா அதிக அக்கறை காட்டுகிறது. தாய்லாந்து உட்பட 80 நாடுகளைச் சேர்ந்தவர்கள் நியூயோர்க உலக வர்த்தகமைய கட்டடத் தகர்ப்பில் சிக்கி பலியாகியிருக்கிறார்கள். எனவே தீவிரவாதத்துக்கு எதிரான போர்ப் பயிற்சியும் இந்த ஆண்டு சேர்க்கப்பட்டது என்று தாய்லாந்துக்கான அமெரிக்கத் தூதர் டேரில் ஜோன்சன் கூறினார்.

அமெரிக்க இராணுவத்தினர் 14 ஆயிரம் பேரும், தாய்லாந்து வீரர்கள் 7ஆயிரம் பேரும் மற்றும் சிங்கப்பூர், சீனா, வியட்னாம், உட்பட 18 நாடுகளைச் சேர்ந்த 21ஆயிரம் இராணுவத்தினர் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். (ம)

# ஈராக் மீதான தடைகளை மேலும் தளர்த்துகிறது ஐ.நா.!

நியூயோர்க்,மே16

ஈராக்கிற்கு மனிதாபிமான ரீதியிலான உதவிகளை மேலும் அதிகரிப்பதற்கு ஐ.நா.பாதுகாப்புச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான புதிய திட்டங்களைச் செயற்படுத்த பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளும் ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளன.


ஐ.நா.வின் புதிய திட்டப்படி பொது மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை தாராளமாக இறக்குமதி செய்வதற்கு ஈராக் அனுமதிக்கப்படும். ஆனால் இராணுவத் தொடர்புடைய பொருள்களுக்கான தடை இறுக்கமாகத் தொடரும்.

அத்துடன் உணவுப்பொருள்களுக்காக ஈராக் எண்ணெய் ஏற்றுமதி செய்வதை அனுமதிக்கும் திட்டமும் மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.


ஐ.நா.வின் இந்தப் புதிய நடைமுறை "ஈராக்கிய மக்களின் முன்னேற்றத்துக்கான ஒரு படி" என்று அமெரிக்க வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் கூறினார்.

"தனது மக்களின் முன்னேற்றத்துக்கான ஒரு நல்ல வாய்ப்பாக ஈராக் அரசு இதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" - என்றும் அவர் மேலும் சொன்னார்.

ஆனால், ஈராக் ஐ.நா.வின் இந்தப் புதிய திட்டம் குறித்து வழமை போன்று தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. தன் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை ஐ.நா. முற்றாக விலக்கிக்கொள்ள வேண்டும் என்று ஈராக் கோருகின்றது. "ஐ.நா.வின் புதிய நடைமுறை ஈராக்கியர்களுக்குப் புதிய தலைவலி" - என்றார். ஐ.நா.வுக்கான ஈராக் தூதுவர் முகமட் அல்துரை. (ம)



நிவாரண உணவு பெறுவதற்காக காத்திருக்கும் ஈராக்கியர்கள்.



ஈராக்கிய எண்ணெய் வயல் ஒன்றில் வேலை செய்யும் ஈராக்கியர்கள்

# தீவிரவாதிகளை ஒடுக்க ஆயுதங்கள்: பிரிட்டனிடம் நேபாளம் கேட்கிறது

லண்டன்,மே16

தீவிரவாதிகளை ஒடுக்க நிதியும், ஆயுதமும் கொடுக்கும்படி பிரிட்டனிடம் நேபாளம் கேட்டிருக்கிறது.

நேபாளத்தில் மன்னர் ஆட்சி முறையை மாற்றும்படி கோரி மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் ஆயிரக்கணக்கான மக்களும், தீவிரவாதிகளும் உயிர் இழந்துள்ளனர்.

தீவிரவாதிகளை ஒழிப்பதற்கு உதவி கேட்பதற்காக நேபாளப் பிரதமர் ஷேர்பகதூர் தேபா அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச சென்றார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சந்தித்துப் பேசினார். பின்னர் பிரிட்டன் சென்று பிரதமர் டொனி பிளேயரைச் சந்தித்துப் பேசினார். தீவிரவாதிகளை ஒடுக்க ஆயுதமும், நிதி உதவியும் செய்யும்படி அவரிடம் கேட்டுக் கொண்டார்.

தீவிரவாதிகளை ஒழிக்க நேபாளத்துக்கு உதவுவதாக பிளேயர் ஒப்புக்கொண்டார். (ம)

# சார்ள்ஸின் காதலுக்கு ராணி 'பச்சைக் கொடி'

லண்டன்,மே16

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத் தனது மூத்த புதல்வர் சார்ள்ஸின் காதலியான கமீலா பார்க்கரை அரச குடும்பத்தில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ள இணங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

சார்ள்ஸ் டயானாவை திருமணம் செய்துகொள்வதற்கு முன்னரே கமீலாவைக் காதலித்து வந்தார். கமீலாவின் கணவர் பார்க்கர் அரண்மனையில் பணியாற்றி வந்தார். சார்ள்ஸை விட கமீலா சில வருடங்கள் மூத்தவர். டயானாவுக்கும் சார்ள்ஸுக்கும் உறவு விரிசலைடைய கமீலாவுடன் சார்ள்ஸ் கொண்டிருந்த நட்பே காரணம் என்று கூறப்பட்டது.

டயானா இறந்த பிறகு கமீலா - சார்ள்ஸ் திருமணம் நடக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் மகாராணி கமீலாவை அரச குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக்கொள்ள மறுத்திருந்ததால் அந்தத் திருமணம் தடைப்பட்டிருந்தது.

இந்நிலையில், மகாராணி முடிசூடிக்கொண்ட 50 ஆண்டுகள் நிறைவையொட்டி இடம்பெறும் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்படி கமீலா பார்ககருக்கும் அழைப்பு அனுபப்பட்டுள்ளது. அதிலும் அரச குடும்பத்தைச் சேர்ந்தோர் மட்டும் அமரும் பகுதியில் அமர கமீலாவுக்கு இருக்கை ஒதுக்கி இராணியின் சார்பில் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அழைப்பின்மூலம், சார்ள்ஸின் காதலுக்கு மகாராணி ஆதரவளிப்பதாகக் கருதப்படுகின்றது. (ஒ)

உலக அரங்கில்

# அமெ.தளம் மீது தாக்குதல்

காபூல்,மே16

கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கப் படைத்தளம் மீது திடீர் றொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

முகாமுக்குள் மொத்தம் 5 றொக்கெட்டுக்கள் வீழ்ந்து வெடித்தன என்றும் -

இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் -

முன்னர் ஒரு தடவையும் இதே போன்று இந்தத் தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ம)

# அரபு நாடுகளின் கூட்டம்

பெய்ரூட்,மே16

மத்திய கிழக்குப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக லிபியத் தலைநகர் பெய்ரூட்டில் நாளையும் நாளை மறுதினமும் அரபு நாடுகளின அமைதிக்குழு கூடவுள்ளது.

லெபனான் சிரியா ஜோர்தான் பலஸ்தனம், எகிப்து, சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைசசர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எகிப்து, சிரியா, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற பலஸ்தீனம் தொடர்பான முத்தரப்புக் கூட்டத்தின் முடிவுகள், பலஸ்தீனத்தின் தற்போதைய நிலை என்பன குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் படும். (ம)



பெய்ஜிங்கில் உள்ள அமெரிக்க மற்றும் ஜப்பானிய தூதரகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சீனப் பொலீஸார் தூதரகங்களைச் சுற்றி முட்கம்பி வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். வடகொரிய அகதிகளால் சீனாவில் உள்ள தூதரகங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளன.

# சாதனை முயற்சி தோல்வி

பாங்கொக்,மே16

தாய்லாந்தில் அதிக எண்ணிக்கையான இரட்டைப் பிறவிகள் ஒரே இடத்தில்கூடி கின்னஸ் சாதனை படைக்க மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

1991 ஆம் ஆண்டு 3ஆயிரத்து 960 இரட்டையர்கள் தைவானில் ஒரே இடத்தில் கூடியதே இதுவரை சாதனையாக இருந்தது.

சுமார் 5 ஆயிரம் இரட்டைப் பிறவிகள் வசிப்பதாக நம்பப்படும் தாய்லாந்தில் இந்தச் சாதனையை முறியடித்து புதிய கின்னஸ் சாதனை படைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், தலைநகர் பாங்கொக்கில் இடம்பெற்ற இந்தச் சாதனை முயற்சியின்போது, 2 ஆயிரத்து 443 இரட்டையர்கள் மட்டுமே கூடினர். இதனால் சாதனை முயற்சி கைகூடவில்லை.

இதனை ஏற்பாடுசெய்த தாய்லாந்து இரட்டையர் சங்கத்தினர் விரைவில் மீண்டும் இந்த முயற்சியில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்தனர். (ஒ)

# வன்னிக்கு அதிகாரிகள் வந்து சென்றும் கல்வியில் அவலநிலை தொடர்கதையாகிறது

## கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் தகவல்

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக வன்னிப் பகுதி சகல விதமான அடிப்படை வசதிகளும் இன்றி - எந்த விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளும் இன்றி புறக்கணிக்கப்பட்டே வருகின்றது. பாடசாலைகளின் பௌதிக வளங்களும் பன்னிரண்டு வருடகால பின்னடைவையே சந்தித்துள்ளன.

- இவ்வாறு கிளிநொச்சி கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் தெரிவித்தார்.

வன்னி கல்வி வலயங்கள், பாடசாலைகள், அரச தரப்பினால் சகல விதத்திலும் புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கிறது என்பதில் இரு கருத்துக் கிடையாது.

அதிக அளவில் ஆசிரியர் பற்றாக்குறை, கட்டடங்கள் இல்லாத நிலை, தற்காலிக கொட்டில்களில் மாணவர்கள் நிலத்தில் இருந்து கல்வி கற்கும் நடவடிக்கையின் அவலம் தொடருகிறது என்பன.

புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பொருளாதாரத் தடைகளைத் தளர்த்தி சாலைகளைத் திறந்து பல விதமான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வாக்குறுதிகளையும் வழங்கியிருக்கிறது.

ஆனால் பாடசாலைகளை பொறுத்த மட்டில் முன்னர் இருந்த அவல நிலையே தற்போதும் தொடருகிறது. இது வன்னிவாழ் கல்வி சமூகத்தினை கவலை அடையச் செய்துவருகின்றது.

கடந்த ஜனவரி மாதம்முதல் அதிக அளவில் அதிகாரிகள் வன்னிக்கு வந்து செல்கின்றனர். ஆனால் பாடசாலைகளைப் புனரமைத்தல், கட்டடங்களை நிறுவுதல், தரையில் அமர்ந்துள்ள மாணவர்களுக்கு தளபாடங்களை பெற்றுக்கொடுத்தல் போன்ற எந்தவிதமான நடவடிக்கைகளிலும் அவர்கள் ஈடுபடவில்லை.

அத்துடன் அவற்றைப் புனரமைப்பது தொடர்பாக அவர்கள் எந்தவிதமான வாக்குறுதிகளையும் வழங்கவில்லை.

கடந்த ஆண்டு பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளுக்கு செலவிடப்பட்ட 30 லட்சம் ரூபா கூட இந்த ஆண்டு வழங்கப்படவில்லை. அதனை வழங்குவது தொடர்பாக எவரும் நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

வன்னி கல்வி வலயங்களின் பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு என்று 'நிகோட்' நிறுவனத்திற்கு சகல விதமான வரைபடங்களும் வழங்கப்பட்டன. ஆயினும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகளில் இரண்டைத்தவிர ஏனையவை சொந்த இடங்களில் இடிந்த கட்டடங்களிலும், தற்காலிக கொட்டில்களிலும் தற்போது இயங்குகின்றன.

- இவ்வாறு அரியரத்தினம் மேலும் தெரிவித்தார்.

### 'புலிகளின் குரல்' செய்தி

இதேவேளை 'புலிகளின் குரல்' செய்தி வெளியிட்ட தகவல்களும் பரப[illegible] ஏற்படுத்திருக்கின்றன.

[illegible]யில் வாழ்ந்துவரும் மக்களின் வாழ்க்கைத்தரம் பொருளாதார தளர்வாலும், யாழ் - கண்டி நெடுஞ்சாலை திறப்பாலும் எந்தவகையிலும் உயரவில்லை.

பொருளாதாரத்தடை தளர்வாலும் கண்டி நெடுஞ்சாலை திறப்பாலும் வன்னியில் உள்ள அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களினதும் வசதி வாய்ப்புக்கள் உயர்ந்துள்ளனவே தவிர வன்னிமக்களில் 90சதவீதமானோரின் வாழ்க்கை மிகவும் மோசமாகவே இருக்கின்றது.

வன்னியின் கடல் உணவுகள் ஏ-9 வீதியின் ஊடாக தென்னிலங்கைக்குக் கொண்டு செல்லப்படுவதால் வன்னி சந்தைகளில் இறால், கணவாய் ஆகியன விற்பனைக்கு இல்லை. சகல வகை மீனினங்களினதும் விலைகளும் 60முதல் 100சதவீதம் உயர்ந்து விட்டன.

அரிசி, தேங்காய் உட்பட அன்றாட உணவுப் பொருள்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன.

பொருளாதாரத் தளர்வினால் வன்னிக்கு வரும் பொருள்களும் மக்கள் கொள்வனவு செய்து பயன்படுத்தும் அளவுக்கு மலிவாக இல்லை.

அந்தப் பொருள்களின் விலைகள் மக்களின் கொள்விலை மட்டத்திற்கு அப்பால் இருக்கின்றன.

சமகால இலத்திரனியல் வளர்ச்சிக்கு ஏற்ப இலத்திரனியல் உபகரணங்களை கொள்வனவு செய்யவோ அவற்றினை பயன்படுத்தவோ முடியாத நிலையில் இலத்திரனியல் பொருள்களின் விலை உயர்வாக இருக்கின்றது.

வர்த்தகர்கள் விலைகளை உயர்த்திய நிலையிலேயே விற்பனை செய்வதால், அவற்றினை வாங்கும் வலுவில் வன்னிவாழ் மக்கள் இல்லை.

பொருளாதாரத்தடைத் தளர்வு, கண்டி நெடுஞ்சாலை திறப்பு என்பன வன்னி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மிகக் குறைந்த அளவுகூட பங்களிப்பை செய்யவில்லை.

வறுமையும் குடிசை வாழ்க்கையும் வன்னியின் 90 சதவீதமான மக்களிடம் இருக்கின்றன.

அரசால் புனர்வாழ்வு புனரமைப்பு அபிவிருத்தி, மீள்குடியேற்றம், வீடமைப்புத் திட்டம் ஆகியவை பற்றிய சகல விடயங்களிலும் வன்னி மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலைமையே காணப்படுகின்றது.

### வீதிகள் புனரமைப்பு

வன்னியின் கண்டி - யாழ்ப்பாணம் ஏ - 9 வீதியின் ஒரு பகுதி திருத்தப்படும் இவ்வேளையில் வன்னியில் உள்ள ஏனைய வீதிகள் மிக மோசமான நிலையில் சேதம் அடைந்தே இருக்கின்றன.

இதன் காரணமாக போக்குவரத்து மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

முல்லை - மாங்குளம் வீதி, பரந்தன் - முல்லை வீதி, பூநகரி - மன்னார் வீதி ஆகியன வன்னியில் முதல் தர வீதிகள் ஆகும்.

வவுனியா - யாழ். ஏ - 9 வீதியின் ஒரு பகுதி மட்டுமே திருத்தப்பட்டுவருகின்றது. ஏனைய வீதிகள் திருத்தப்படும் நிலை காணப்படவில்லை.

பயணிகள் ஓமந்தைக்கும் முகமாலைக்கும் இடையில் தற்போது மேற்கொள்ளப்படும் பஸ் சேவையில் அளவுக்கு அதிகமாக ஏற்றப்படுகின்றனர்.

இதன் காரணமாக மக்கள் மிகவும் மோசமாகப் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்று 'புலிகளின் குரல்' வானொலி செய்தி வெளியிட்டது.

சாதாரணமாக இரண்டு பஸ் வண்டிகளில் ஏற்றப்படவேண்டிய பயணிகளை ஒரு பஸ்ஸில் அடைத்து ஏற்றுகிறார்கள்.

வீதிகள் மோசமாக இருப்பதால் மக்கள் புழுதியில் குளித்தபடிதான் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மகாமுனி

# சமாதானத்தை எதிர்ப்பவர்கள் அதற்கு தெரிவிக்கும் மாற்றுவழிகள் என்ன?

## பிரதமரின் கேள்விக்குப் பதிலளிப்பார் இல்லை

விடுதலைப் புலிகளை எவ் வகையிலும் பேச்சு மேசையில் சந்தித்து விடுவது என்று பிரமர் ரணில் விக்கிரமசிங்க திடசங்கற்பம் பூண்டுள்ளார் என்று தெரிகிறது.

மேதினக் கூட்டத்தில் அவர் பேசும்போது -

"தனிநாட்டுக் கோட்பாட்டிற்கு மாற்றீடாக தமிழ் மக்களுக்கான சுயாட்சி முறையொன்று கிட்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழக் கோட்பாட்டைக் கைவிடத் தயாராக இருக்கின்றார்கள். இந்நிலையில் அவர்களைப் புறக்கணித்து நாடு மீண்டும் தீப்பற்றி எரிய இடமளிக்க முடியுமா? எனக் கேட்டுள்ளார்.

அத்துடன் சமாதானத்திற்காக புலிகளுடன் பேசுவது முக்கியம். இதனை எதிர்ப்பவர்கள் மாற்றுவழிகளைத் தெரிவிக்க வேண்டும் எனவும் கடும் தொனியில் பிரதமர் எச்சரித்துள்ளார்.

சமாதானத்திற்கு மாற்றுவழி சண்டை மட்டுமே என்ற நிலையில் நாடு சண்டைக்குத் தயாரா? என்ற கேள்விக்குப் பதில் தரும்படியே அவர் சமாதானத்தை எதிர்ப்பவர்களைக் கேட்கின்றார் என்பது தெளிவு.

இருபது ஆண்டுகள் சண்டை நடத்தியதன் விளைவாக சுதந்திரம் பெற்ற பின்னர் முதன்முறையாக எதிர்மறையான விளைவே மொத்தத் தேசிய உற்பத்தி விடயத்தில் கிடைத்துள்ளது.

### வேண்டாத யுத்தம்

அதேவேளை - வேண்டாத யுத்தமொன்றில் ஈடுபட்டிருக்கும் ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு பணத்தைவாரி இறைப்பதற்கு வளர்ச்சியடைந்த நாடுகள் மறுத்துவிட்டன. இனி என்ன? உள்நாட்டில் உற்பத்தியுமில்லை. வெளிநாடுகளின் பிச்சையுமில்லை.

போரினால் ஏற்படும் மனித அழிவுகளும், ஏனைய அழிவுகளும் தாக்கும்போது அவற்றைத் தாக்குப்பிடிக்க முடியாது ஒரு சமுதாயம் அழிந்து போகும் நிலையே மிஞ்சும். இந்நிலையைத் தவிர்க்கமுடியாதபடி மக்கள் மத்தியிலிருந்து பயங்கரவாத இயக்கங்கள் தோன்றும்.

மேலும் மேலும் மீட்சியே இல்லாமல் படுகுழிக்குள் நாடு தள்ளப்பட வேண்டிய நிலை ஏற்படும். இந்த நிலை ஜே.வி.பி. அல்லது அது போன்ற தீவிரசக்திகளின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாகி விடலாம்.

இதனையே கடந்த டிசெம்பர் தேர்தல் பிரசாரங்களின் போது பழம் பெரும் ஜே.வி.பி. சிந்தனையாளர் சோமவன்ச அமரசிங்க சந்தேகமற்ற வார்த்தைகளில் கூறியிருந்தார்.

"நாம் மீண்டும் ஆயுதம் ஏந்துவதற்கு தயங்கமாட்டோம்" என்று அவர் குறிப்பிட்டார்.

### இடைக்கால நிர்வாகம்

இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதை அனுமதிக்க மாட்டோம். புலிகள் மீதான தடை விலக்கப்படுவதை இறுதிவரை எதிர்ப்போம். நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்துவோம் என்ற வகையில் சுலோகங்களை எழுப்புகிறார்கள். இதன் பின்னணியில் நாட்டுக்கு அழிவு ஏற்படும். நமக்கு ஆட்சி கிடைக்கும் என்ற குறுகிய சிந்தனையின் நீண்ட திட்டம் இருக்கிறதா?

இலங்கையில் சமாதான நடவடிக்கைகளில் அமெரிக்கா வெளிப்படையாகவே ஆர்வம் காட்டி வருகிறது.

அண்டை நாடும் அக்கறையுள்ள வல்லரசுமான இந்தியா காட்டிவரும் அக்கறையைவிடவும் அமெரிக்கா காட்டிவரும் ஆரவாரம் அதிகம். இந்த ஆரவாரம் ஒருவகை உத்தரவாதமாகவும் தோற்றம் தருவதாக மாறிவருகிறது.

ராஜாங்கத் திணைக்களமும், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமும் மாறிமாறி அறிக்கைகள் வெளியிடுகின்றன. அடிக்கடி அதிகாரிகள் மட்டத்திலும் பிரதி அமைச்சர்கள் மட்டத்திலும் வந்து போகிறார்கள்.

கண்ணிவெடி அகற்றும் குழுவும், நாய்களும் கூட பணியில் ஈடுபட்டிருக்கின்றன. யூ.எஸ்.எஸ். ஹொப்பர் ஏவுகணை தாங்கி நாசகாரிக் கப்பல் கொழும்பு வந்து பத்து மணித்தியாலங்கள் தங்கித் திரும்பிச் சென்றுள்ளது.

தற்போது யு.எஸ்.எஸ். சைட்ஸ் கப்பலும் வந்து 4 நாள்கள் தங்கிச் சென்றுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் ஒருபுறம் சிங்கள மக்களுக்கு தெம்பூட்டுவனவாக உள்ளன. ஆட்சியிலுள்ளவர்கள் தாம் உலக வல்லரசின் உறுதுணையோடு சமாதான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கின்றோம் என்று உற்சாகமடைகிறார்கள்.

நாம் தனிமைப்படுத்தப்பட்டு விடவில்லை என்று பிரதமரும் கூறியிருந்தார்.

இதேவேளை, இது ஜே.வி.பி. போன்ற இயக்கங்களுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது போலாகிவிட்டது. மக்களுக்குச் சமாதான நடவடிக்கைகளில் மன நிறைவு ஏற்படுவதால் சமாதான சக்திகளே வளரும். மேதினக் கூட்டங்கள் சுட்டிக்காட்டுவதும் இந்தப் போக்கையேயாகும்.

ஜே.வி.பி. அதன் வளர்ச்சிக் காலங்களில் இந்தியாவையே ஏகாதிபத்திய சக்தி என்று விமர்சித்து வந்தது.

இந்தியப் பொருள்களின் இறக்குமதியையும், விற்பனையையும் பகிஷ்கரிக்க வேண்டும் என்றது.

1987 - 1989 காலத்தில் இந்தியா, இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவ முன்வந்ததை எதிர்த்து பெரும் கலவரங்களில் ஈடுபட்டது.

ஆனால் சோமவன்ஸ அமரசிங்க 1989இல் தான் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு ஒத்தாசை புரிந்த இந்திய அதிகாரிகளையும் முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி.சிங்கையும் பாராட்டினார். இன்றைய நிலையில் இந்திய எதிர்ப்பு கைவிடப்பட்ட நிலை. எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன் என்ற சிந்தனை வளர்ச்சி காரணமாயிருக்கலாம்.

இடதுசாரிகளுக்குப் பரம்பரை எதிரி அமெரிக்கா. எடுத்ததற்கெல்லாம் அவர்கள் அமெரிக்காவையும் அமெரிக்காவுடன் ஒட்டி உறவாடுபவர்களையும் சாடுவர்.

இந்த அரசாங்கம் அமைக்கப்பட்டு இந்தக் குறுகிய காலத்தில் அமெரிக்க - இலங்கை சுதந்திர வர்த்தகம் என்னும் எல்லைவரை உறவுகள் பொருளாதாரத் துறையிலும் நீண்டுவிட்டன.

எரிக் சொல்ஹெமை அனுசரணையாளர் என்ற அந்தஸ்திலிருந்து முன்னாள் அரசு இறக்குவதற்குக் காரணமாயிருந்தவையென்று விமர்சிக்கப்பட்டவற்றில் அவர் இலங்கை விவகாரங்களை அமெரிக்க ராஜ[illegible] அமைச்சு அதிகாரிகளிடம் சென்று விளக்கிக் கூறினார் என்ற குற்றச்சாட்டும் இருந்தது.

அன்றைய ஆட்சியின் அந்த நிலைப்பாட்டையே ஜே.வி.பியும் கொண்டிருந்தது.


சமாதானம் வராவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் உள்நாட்டின் தில்லுமுல்லுகள் வெளிப்படாமலிருந்தால் போதும். அதன் விளைவாக மீண்டும் போர் வரும்போது நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காக மக்கள் தியாகம் செய்யட்டும் என்று சிந்தித்தார்கள்.

இந்நிலையில் சண்டைக்குத் தயார்படுத்துபவர்கள் யார்? சமாதானத்திற்கெதிராக இயக்கம் நடத்துபவர் யார்?

- இவற்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

பிரதமரின் திடசங்கற்பம் இவற்றையெல்லாம் வென்று அப்பால் செல்லுமா?

(வீ.வீ.ரீ.)



செம்மணி இந்து மயானத்தில் மண்டபம், கிணறு, மழைக்காலத்தில் தகனக்கிரியை செய்யும் கொட்டகை ஆகியன புனரமைக்கப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டன.

மயான மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் செம்மணி இந்துமயான சபையின் செயலாளர் வ.பரமசிவம் உரையாற்றுவதை மேல் உள்ள படத்திலும் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட மண்டபத்தை கீழ் உள்ள படத்திலும் காணலாம். (ஐ)

# யாழ். மணிக்கூட்டு கோபுர வீதி விரைவில் மக்களின் பாவனைக்கு!

யாழ்ப்பாணம்,மே16

கடந்த ஆறு வருடங்களாக மக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்பட்டிருக்கும் யாழ். மணிக்கூட்டுக் கோபுர வீதி விரைவில் பாவனைக்கு அனுமதிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக யாழ் மாநகரசபை முதல்வர் புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுடனும் யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடனும் கலந்துரையாடியதை அடுத்து வீதியைத் திறப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக வீதியைத் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பமாகவுள்ளன. இதற்கென மாநகர சபையின் ஊழியர்களைத் தந்துதவுமாறு பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க தாம் 15பேரை அப்பணிகளுக்கென நியமித்துள்ளதாகவும் -

முதல்வர் கந்தையன் தெரிவித்தார்.யாழ். மணிக்கூட்டுக் கோபுரப பகுதியில் இருந்து போதனா வைத்தியசாலையின் முன்பகுதி வரையான வீதியை முதலில் மக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-10-8)

ARPICO

# ஆர்பிக்கோ

## முதற் தரமான தெரிவு இப்போது உங்கள் அருகிலே

## யாழ்ப்பாணம் விநியோகஸ்தர்கள்

**பொப்பியுலர் மோட்டோர் ஸ்ரோர்ஸ்**

270, ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்

### இறப்பர் பொருள்கள்

இறப்பர் பொருள்கள் உற்பத்தியில் முன்னணி நிறுவனம் ஆர்ப்பிக்கோ (ரிச்சேர்ட் பீரிஸ் தாபனம்). ஹோஸ்பைப், இறப்பர்த் கால்மிதி, தரை விரிப்புகள், வாகனத் கால்மிதி போன்ற பலவித இறப்பர் பொருள்களும் உள்ளன. தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ற பல இறப்பர் பொருள்களும் தரமானதாக உருவாக்கப்படுகின்றன.



ARPICO RUBBER
இறப்பர் பொருள்கள்





### பிளாஸ்டி ஷெல்ஸ் தண்ணீர்த் தாங்கிகள்

சர்வதேச தரத்தில் ஆகார பாவனைக்கேற்ற பிளாஸ்டிக் வகையால் தயாரிக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கிகள் 1932 ஆம் ஆண்டு முதல் இலங்கை மக்களின் நம்பிக்கை பெற்ற ஆர்ப்பிக்கோ தயாரிப்பு. கறள் பிடிக்காது, கீறலோ வெடிப்போ ஏற்படாது. பூசி பிடிக்காது. எந்தக் காலநிலைக்கும் ஈடு கொடுக்கும். கனமற்றது. சுலபமாக எடுத்துச் செல்லலாம். நிர்மாணிக்கலாம். 4 அளவுகளில் கிடைக்கும்




ARPICO PLASTISHELLS®
தண்ணீர்த் தாங்கிகள்

### ரெஜி ∴போர்ம்

பொதியிடலுக்குக்கேற்ற பெட்டிகளையும் உற்பத்தி செய்யும் ரிச்சேட் பீரிஸ் கம்பனியின் உற்பத்திகள் இவை.

ரெஜி∴போர்ம், கனமற்றது. கசிவுப் பாதுகாப்புத் தரும். மேலும் குறைந்த வெப்பக் கடத்தாற்றல், என்ற நன்மைகளையும் தருவது. பெட்டிகள், கொள்கலன்கள், அலங்கார அட்டைகள், மிதப்புகள் என்று பல விதங்களிலும் கிடைக்கும்.



ARPICO
Rigifoam
ரெஜி ∴போர்ம்

### ஆர்ப்பிக்கோ மெத்தைகள்

ஆர்ப்பிக்கோ மெத்தைகள் தரம் மிக்கவை. நீடித்துழைப்பவை. சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்டவை. தொட்டில் மெத்தைகள் முதல் பலவித அளவுகளில் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்துக்கும் கேடு விளைவிக்காது.

**வுட்சனஸ்**

63, கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்



ARPICO
MATTRESSES
மெத்தைகள்



# இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
# இரதோற்சவ சிறப்பு மலர்
## 16.05.2002 வியாழக்கிழமை





ஓங்கார ரூபனே உமையாளின் மைந்தனே
உம்பர்க்கு அருளும் கோவே
பாங்காகவே இணுவை வந்துறை நாயகா ~ ஸ்ரீ
பரராசசேகரக் கணேசனே ~ நெஞ்சம்
நீங்காமலே பதம் நிறுத்தியே தொழுதிடும்
நின் அடியவர் அன்பர் எல்லாம்
தீங்கின்றி வாழவும் தீமைகள் அகலவும்
தேரேறி வந்து அருள்வாய்.

**வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன்.**

## மூன்று தேரேறி வந்து அருள் பாலிக்கும் மும்மூர்த்திகள்

இயற்கை அழகினாலும் கல்விச்செல்வம், பொருட்செல்வம் என்பவற்றாலும் சிறந்து விளங்குவது இணுவையம்பதியாம். இத்தென் இணுவையம் பதியில் பரராச சேகரப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இந்தப் பிள்ளையாரை குலதெய்வமாக வணங்கி வழிபட்டு வந்தவர் அவ்வூரைச் சார்ந்த தியாகர் நாகமுத்து என்னும் பெரியவராவார். இவர் சைவ வேளான் மரபைச் சேர்ந்தவர் ஆவார். இவர் தனது தகப்பனார் செய்துவந்த தேர்த்திருவிழாவை தவறாது செய்துவருகின்ற காலத்திலே ஒருநாள் புதிய சித்திரத் தேரைச் செய்ய வேண்டும் என்னும் புதியதொரு எண்ணம் அவர் மனதிலே உதயமானது. அதன்பிரகாரம் 1965ஆம் ஆண்டில் புதிய சித்திரத்தேர் ஒன்று உருவாகத் தொடங்கியது. இவருக்கு இவர் சந்ததியாரும் பொருள் உதவி செய்தார்கள். இந்தச் சித்திரத்தேரை திருநெல்வேலியைச் சேர்ந்த செல்லையா கந்தசாமி என்ற (ஸ்ரீவாணன் சிற்பாலய) சிற்பக்கலைஞர் நல்ல முறையிலே செய்து முடித்தார். அதன் பிரகாரம் 04.05.1966ஆம் ஆண்டில் இதன் வெள்ளோட்டம் நடைபெற்றது. அடுத்த மாதம் நடைபெற்ற உற்சவ காலத்தில் முதன்முறையாக இத்தேரில் விநாயகப்பெருமான் வீதியுலா வந்து எல்லோருக்கும் அருள் பாலித தார். இத்தேரை விடுவதற்கு இடமில்லாதிருந்தபோது தற்போதைய பிரதம குருக்களாகிய வை.சோமாஸ்கந்தர் அவர்களின் பெரியதகப்பனாகிய சிவஸ்ரீ சி.சதாசிவக் குருக்கள் இரண்டுபரப்புக் காணியை எங்களுக்கு உபகரித்தார். அதில சிறந்த ஒரு தேர் வீட்டையும் கட்டி அதிலே தேரைப் பாதுகாப்பாக விட்டோம்.

பின்னர் பரிவார மூர்த்தியாகிய முருகப் பெருமானுக்கும் ஒரு சித்திரத் தேர் பொன்னம்பலம் என்பவர் தலைமையில் செல்லையா கந்தசாமி என்ற சிற்பக்கலைஞரால் உருவாக்கப்பட்டு 10.06.1975ல் ஓடத்தொடங்கியது. மூன்றா வது தண்டேசுவரருக்கும் ஒரு சித்திரத் தேர் வேலுப்பிள்ளை செல்லத்துரை (சாத்திரியார்) என்பவர் தலைமையில் உருவாக்கப்பட்டு 1976இல் வெள்ளோட டம் ஓடியது. இத்தேரை கலாகேசரி ஆ.தம்பித்துரை அவர்கள் தமது கைவண் ணத்தால் செய்து முடித்தார். இம் மூன்று சித்திரத் தேர்களிலும் இன்றுவரை மும்மூர்த்திகள் எழுந்தருளி எல்லோருக்கும் கிருபைபாலித்து வருகின்றார்.

இந்த மூன்று தேர் வேலைகளையும் ஸ்தாபகரின் சந்ததியாரான ஆறுமுகம் சுந்தரம் என்ற பெரியாரும் சிவதொண்டருமாகியவர் முன்னின்று செய்துமுடித்தார். இன்று இந்த இரதோற்சவதினத்தில் மும்மூர்த்திகளையும் அடியார்கள் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறுமாறு கேட்டுள்கொள்கின்றோம்.

**நா.பொன்னுத்துரை, ஓய்வுபெற்ற உப அதிபர்.**

| | | |
|---|---|---|
| காலை | 07.00 | வசந்தமண்டப பூஜை . |
| காலை | 10.00 | இரதோற்சவம் |
| நண்பகல் | 12.00 | மகேஸ்வர பூஜை |
| பிற்பகல் | 03.30 | பச்சை சாத்தி அர்ச்சனை |

## தேரேறிவரும் காட்சி தெய்வலோகமாக்குதையா!

*ஊர்கூடி வடம் பிடித்து ஓங்கார உனைச் சித்திரத்*
*தேர் இருத்தி வீதி வலம் நாம் இழுத்து வருகின்றோம்*
*பார் போற்றும் நல்லிணுவைப் பரராஜ சேகரனே!*
*யார் தான் உனையன்றி ஆதரிப்பார் எம்மையெல்லாம்*

*வெவ்வினையை வேரறுக்கும் விநாயகனும் நீ அல்லவோ?*
*அவ்வை தமிழ் கேட்குமுத்தி அளித்தனையே கணபதியே!*
*செவ்வடிவேல் முருகனுக்கு வள்ளிமணம் செய்துவைத்தாய்!*
*திவ்வியவன் சேவடிகள் சிற்பரனே தாராயோ?*

**- மஹா வித்துவான்.**

## ஆலயப் பிரதமகுருவின் அருளாசியுரை

**சரித்திரப் பிரசித்திபெற்ற புராதன ஆலயமான ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலின் சித்திரபானு வருட மகோற்சவத்தின் பத்தாம் நாளான இன்று தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. பஞ்சகிருத்தியங்களை குறிக்கும் மகோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கும் வண்ணம் அமைகிறது. மகோற்சவத்தின் சிறந்த விழாவாக இந்தத் தேர்த்திருவிழா நடைபெறுகிறது. யாழ்ப்பாண அரசர் பரம்பரையில் வந்தவன் எனக் கருதப்படும் பரராஜசேகரன் என்னும் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு செய்த தலம் இத்தலம். இத்தலத்திலே வைகாசி மாத திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய சதுர்த்தி விரத நன்னாளான இன்று லோக ஷேமத்திற் காக பிரணவ பொருளாம் ஐங்கரன் பஞ்சமுகவிநாயகராக வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணிய பெருமானோடும் சண்டேஸ்வர பெருமானுடனும்கூட சித்திரத்தேரிலே எழுந்தருளல் செய்கிறார். இந்த சுப தினத்திலே நாட்டிலே சமாதானமும் சுபீட்சமும் நிலைத்திட மக்கள் எல்லா நலமும் பெற்று வாழ விநாயகப் பெருமான் ஆசி கூறி அமைகின்றேன்.**

லோக சமஸ்தா சுகினோ பவந்து
வை சோமாஸ்கந்தக் குருக்கள்.


கணபதியே வருக! நல்லருளே தருக!!
பிள்ளையார் கொமினிக்கேசன்
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
உள்நாடு: 021 - 3570
வெளிநாடு: 0094 - 21 - 3570
சிவம் கட்டடம்,
கே.கே.எஸ்.றோட், இணுவில்.
(C/22115)

வினைகளை வேரறுக்கும் விக்கின விநாயகனே தேரில் பவனி வந்திடும் .....
கட்டடப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றிட நாடுங்கள்:
சிறிகுமரன் ஹாட்வெயர்ஸ்
83, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C/22129)

பாவ வினைபோக்கிட தேரில் பவனி வந்திடும் பரராஜசேகரப் பிள்ளையாரே பதமருள்வீர்!
நவீனமயமான நல்லரக சாறி வகைகளுக்கும் புதிய மோஸ்தர்களிலான ஆடைவகைகளுக்கும் நாடுங்கள்; நம்பிக்கையான இடம்:
மகாநதி புடைவையகம்
சாறி பிளவுஸ், பீஸ் வகைகளுக்கு தனியான காட்சியறை உண்டு.
இல.16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
16, நவீன சந்தை மேல்மாடி.
(C/22100)

கணபதியே கைதொழுதோம்! காத்தருள் புரிவாயா!
நங்கையர் விரும்பும் நவநாகரீக ஆடைவகைகள் - இந்திய, சிங்கப்பூர் சாறிகள், அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் ஆகியவற்றுக்குச் சிறந்த இடம்:
சிவம் ரெக்ஸ்ரைல
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (C/22107) கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

விநாயகனே வினைதீர்க்க வருவாய்யு
சகலவிதமான சில்வர் பாத்திரங்களுக்கும் அன்பளிப்புப் பொருள்களுக்கும் மற்றும் நவநாகரிகமான ஆடைவகைகளுக்கும் நாடவேண்டிய இடம்:
வாசவன் ரெக்ஸ் அன் பான்ஸி
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில். (C/22109)

வினை போக்கியருளும் விநாயகா வருவாய்!
புதிய, பழைய பாடல்களை CD யில் பதிவு செய்து கொள்ளவும் சிறந்த நவீன திரைப்படப் பிரதிகளை வாடகைக்குப் பெறவும்
விஷ்ணு வீடியோ
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில். (C/22110)

கணபதியே வருவாய்! நேர்மிசை அருள்வாய்!!
தரமான பொருள்களை நியாய விலையில் பெற இன்றே விஜயம் செய்யுங்கள்:
பசுபதி ஸ்ரோர்ஸ்
- பல்பொருள் வாணிபம் -
(பத்திரிகை முகவர்)
கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில். (C/22111)

தேரேறிவரும் தேவாதி தேவனே! அடியவர் களுக்கருள ரதத்தில் ஆரோகணிப்பீர்!
நவநாகரிகமான நல்ல ரக நவீன சாறிவகைகள் மற்றும் ஆடைத் தெரிவுகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
சிற்றி கணன் காமென்ஸ் அன் ரெக்ஸ்ரைல்ஸ்
வாகுமாலை, மகரதோரணம், பட்டுக்குடை ஆகியவை ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்
சிம்சன் ப்ரா உற்பத்தியாளர்கள்
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (C/22106)

ஆனைமுகனே ஆரோகணிப்பாய் தேரில்! ஆறுதல் தருவாய் நேரில்!!
பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்களுக்கு உகந்த புத்தகங்கள், கொப்பிகள், பென்சில்கள், பேனாக்கள் மற்றும பாட உபகரணங்கள் பெற்றுக்கொள்ள
ச.க்ருஷ்ணராஜா
நியூஸ் பேப்பர் ஏஜென்ட்,
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (C/22112)

விக்ன விநாயகனே காத்தருள் புரிவாய்!
நல்ல தரமான, நல்ல ரகமான பொருள்களுக்கும் ஐஸ்கிறீம், குளிர்பான வகைகளுக்கும் உடன் நாடுங்கள்:
லிங்கம் ஸ்ரோர்ஸ்
- பல்பொருள் வாணிபம் -
கஜன் கிறீம்ஹவுஸ்
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (C/22113)

பரீட்சையில் திறமைச் சித்தி வேண்டுமா?
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையாரின் பாதக்கமலங்கள் பணிந்து அருள் பெற்றுப் பாடங்கள் பயின்றிட அனைத்து மாணவர்களும் அன்போடு நாடுமிடம்
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (C/22114)

ஆனைமுகனே! தேரில் ஆரோகணிப்பாய்!
குறை தீர்ப்பாய் கணபதியே
உறவினர்களுடன் உடனுக்குடன் உரையாடிட உகந்த இடம்
சாந்தினி
தொலைத் தொடர்பு சேவை
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
(ஆஸ்பத்திரிக்கு முன்பாக)
உள்நாடு 021 3390 021 3633
பக்ஸ் 3390
வெளிநாடு 0094 21 3390 0094 21 3633
(C/22104)

தேரேறி வந்து வினைகளை வேரறுப்பாய்! விக்ன விநாயகனே!
கண்ணைப் பறிக்கும் கவர்ச்சிமிக்க கவறிங் நகைகள், மேக்கப் செற், பரதநாட்டிய செற், சாறி போடர் லேஸ் வகைகள், நூல் வகைகள் பெற்றிட
சிவராகினி
Sivarakini FanCy Goods
தொலைத் தொடர்பு சேவை
159, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/22103)

வினை தீர்க்கும் விநாயகனே! தேரில் ஆரோகணித்து பக்தர் குறை போக்கிடுவீர்!
அலுமினிய, எவர் சில்வர் பாத்திரங்கள், நாகரிகப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், சூட்கேஸ் வகைகள், சிறுவர் சைக்கிள், விளையாட்டுப் பொருள்கள் இன்னும் பல மலிவாகப் பெற்றிடச் சிறந்த இடம்
பெஷன் ஹவுஸ்
இல.203 (65), கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். T.P.2197 (C/22102)

கணபதியே வருவாய்! கைதொழுதோம் அருள்வாய்!
நல்ல தங்க நகைகளைப்பெற நவநாகரீக நங்கையர்கள் நாடி வருமிடம்
ஸ்ரீ சாயி நகைமாடம்
கே.கே.எஸ்.வீதி, இணுவில். (C/22128)

பாவங்கள் தொலைத்திடும் பரராஜசேகரப் பிள்ளையாரே! பாதக் கமலங்கள் பணிந்தோம்! காத்தருள்வீர்!!
புத்தம் புதிய நவீனமயமான ஆடைத் தெரிவுகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்
சாந்தி புடைவையகம்
இல.157, 158, நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில (இணுவில்) (C/22101)

தேரேறி வந்து போரோயச் செய்த பெருமானே!
கணபதியே கைதொழுதோம்! காத்தருள்!
எலலாவிதமான நவீன ஆடைகள், பட்டுப் புடவைகள், வேஷ்டிகள், சால்வைகள், துணிமணிகள் மற்றும் அழகுசாதனப் பொருள்கள் முதலியவற்றுக்கு கைராசியான ஸ்தாபனம்:
கணேசன் சென்டர்
தாவடி வடக்கு - கொக்குவில்
T.P: 070 - 212293
அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் அன்போடு அழைக்கின்றோம்
(C/22108)

பானை வயிற்றோனே! பக்தர்களைக் காப்பவனே!
பரராஜசேகரப் பிள்ளையாரே அருள்வாய்!
கலப்படமற்ற, சுத்தமான, தரமான, நல்ல ரகமான பொருள்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:
நாதன் சகோதரர்
பல்பொருள் வாணிபம்
கே.கே.எஸ். வீதி,
இணுவில்.
(C/22105)


**குறிப்பு:** இரதோற்சவத்தை முன்னிட்டு கொழும்பு சர்வதேச வானொலியிலும், யாழ் சேவையிலும் 8.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை நேரடி அஞ்சல் நடைபெறும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அச்செழு வடக்கு, நீர்வேலியைச சேர்ந்த செல்வரத்தினம் சபேசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.743031369V) ஏ-9 பாதையூடாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைக் கவும். (3769)

சிறீஸ்கந்தராசா ரூபேந்தினி என்ப வருடைய விசேட அடையாள அட்டை (இல091024874 - தனங்கிளப்பு, சாவ கச்சேரி), முகமாலைக்கும் யாழ்ப் பாணத்திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொல் புரம் மத்தி, சுழிபுரம என்னும் முகவரி யில் ஒப்படைத்துதவவும். (3764)

நடராஜா சுதன் ஆகிய எனது தேசிய அ.அ. (இல.733613645V)யும் விசேட அடையாள அட்டையும் சுன் னாகத்திற்கும் யாழ்.போதனா வைத் தியசாலைக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். பஸ்நிலையத்தில் ஒப்படைக்கும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள் கின்றேன். (3784)

## மணமகன் தேவை

யாழ். இந்து, கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, 1967இல் பிறந்த, செவ்வாய்க்குற்றம் அற்ற, கிரக பாவம் 11 உடைய, **5'3"** உயரம், அழகிய, அரசபதவியில் உள்ள B.A பட்டதாரி மணமகளுக்கு மணமகன் தேவை. திருமண தரகர்களும், தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:- விளம்பர இல.1517, மே/பா உதயன். (3785)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. தங்கிநின்று பணிபுரிபவர் விரும்பத்தக்கது. தொடர்பு:- D.Sam, 237, கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம். (C/22144)

## கைமாறிவிட்டது

11.05.02 சனிக்கிழமை மாலை அம்பாள் வெதுப்பகம் முன்பாக ஆனைப்பந்தி சந்தியில் பெண்கள் (லுமாலா) சைக்கிள் ஒன்று கைமாறி விட்டது. தவறுதலாக மாறி எடுத்த வர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:- 54A, பலாலி வீதி, கந்தர்மடம், நல்லூர். (3760)

## விற்பனைக்கு

நல்லின German Shepherd (அல்சேஷன்) நாய்க்குட்டிகள் விற் பனைக்கு உண்டு. தொடர்பு:- கி.சேந்தன், 15/25, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி (சிவன் அம்மன் கோயில் அருகில்). (3790)


**விற்பனைக்கு**

குளிர்சாதன, கொம்பிறசர்கள், கொண்டென்சர்கள், பில்டர்கள், செப்புபைப்புக்கள், மீற்றர்கள், GAS, ரைம்மர்கள் என்பன விற்பனைக்கு உண்டு.
SAIRAM TRADING CO.,
101,PALALY ROAD,
JAFFNA. (3789)




# சாயி சிந்தனை

## பக்தர்கள்

தேனீ, ஈ இவை இரண்டையும் நாம் காண்கின்றோம். தேனீ மலரின் மகரந்தத்தை நாடிச் செல்கிறது. அதைத்தவிர வேறு எங்கும் தேனீ செல்வதில்லை. அதன் உறுதியும் கட்டுப்பாடும் அப்படிப்பட்டது. ஈ அப்படிப்பட்டதல்ல. அது இனிப்புக் கடையில் உள்ள இனிப்பின் மேல் உட்காருகிறது; குப்பை மேல் உட்காரு கிறது; மேலும் பல் மேலும் உட்காருகிறது. இதுவா உண்மையான வாழ்க்கை? அதற்கு நியமமோ, கட்டுப்பாடோ கிடையாது. ஒரு சமயம் உணவுப் பொருள்களில் உட்காருகிறது; மறுசமயம் கழிவுப் பொருள்கள் மேல் உட்காருகிறது.

மனிதர்களிலும் ஈ போன்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஈ போல இந்தச் சுவாமி, வேறொரு சுவாமி, பின்பு மூன்றாவது சுவாமி என்று அலைகிறார்கள். இவர்கள் ஈயைவிட மிகுந்த அறி விலிகள்.

ஒரே மார்க்கம், ஒரே சத்யம், ஒரே தெய்வம் யாரை வேண்டு மானாலும் பற்றிக்கொள். மாற்றிக்கொண்டே இராதே. இக்காலத்தில் பக்தி சுயநலத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. சுயநல ஆசையை நிறைவேற்றிக்கொள்ள அவர்கள் கடவுளைத் தேடி அலைகிறார்கள். தேனீ மலரை நாடுவது போல மனிதன் இறை வனை நாடவேண்டும். இதுவே பக்தியின் உண்மையான இயல்பு.


**திருநெறிய தமிழ் மறைக் கழகம்**
**இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கோயில்**
**பண்ணிசைப் போட்டிக்கான**
**பரிசளிப்பு விழா 2002**

*நாள்:* இன்று (16.05.2002) வியாழக்கிழமை
*நேரம்:* நண்பகல் 12.30 மணி
*இடம்:* ஆலய மண்டபம்

பரிசிற்குரியவர்கள் அனைவரும் (தங்கப் பதக்கம், பரிசில்கள், சான்றிதழ்கள்) தவறாது சமுகம் தரவும்.

(சி-22148) - திருநெறிய தமிழ் மறைக் கழகம்.



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



இலங்கை ஆசிரியர் சேவையில்
25 வருடங்களை நிறைவுசெய்து
இன்று (16.05.2002) வியாழக்கிழமை
வெள்ளிவிழாக்காணும்
எமது வித்தியாலய ஆசிரியை
**திருமதி கௌரி கணேசலிங்கம்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு,
மேலும் அவரது சேவை சிறக்க
இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம். (3787)


## புராணபடன ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே16

தெல்லிப்பளை கருணைமிகு காசி விநாயகர் தேவஸ்தானத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு திரு.சண்முகவடிவேல் தலைமை யில் கந்தப்புராணபடனம் ஆரம்ப மாகவுள்ளது. (ஐ)

## பளைப் பகுதியில் 200 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

தென்மராட்சி,மே16

பளைப்பிரதேசத்தில் இதுவரை மாசார், முகாவில், தர்மக்கேணி ஆகிய பகுதிகளில் இருநூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்துள்ளன.

இக் குடும்பங்களுக்கான ஏப்ரல் மாதத்திற்குரிய நிவாரண உலர் உண வுப் பொருட்களை பளையில் உள்ள பளை ப.நோ.கூ.சங்கம் கிளைக் கடை யில் வழங்குவதற்கு பிரதேச செயல கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகிறது.

ஏனைய பளைப் பிரதேச மக்கள் தற்போது தங்கியுள்ள பகுதிகளில் நிவாரணத்தினைப் பெற்றுக் கொள்ளு மாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இனிமேல் மீளக் குடியமரும் மக்களுக்கு மே மாத நிவா ரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரி விக்கப்பட்டது. (க-117)

## வலி.மேற்கில் கசிப்பு, கஞ்சா ஒழிப்பு நடவடிக்கை

வலி.மேற்கு,மே16

வலிகாமம் மேற்குப் பிரதேச செய லர் பிரிவில் கசிப்பு, கஞ்சா, சட்ட விரோத மதுபான விற்பனவு ஆகிய வற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சங் கானை கலால் பகுதியினர் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள் ளனர்.

இது தொடர்பாக அண்மையில் இப்பிரதேச கிராம உத்தியோகத்தர் களுடன் சங்காளை கலால் பகுதி பொறுப்பதிகாரி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

சுழிபுரம், பனிப்புலம், சங்கானை, வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் கசிப்பு உற்பத்தியும் விற்பனவும் அதிக மாகக் காணப்படுவதாக இனம் காணப பட்டது. இப்பிரதேசங்களில் மக் களின் ஒத்துழைப்புடன் விழிப்புணா வுக் கருத்தரங்குகளை நடத்துவதற் கும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (ஒ-177)


**தேவை**

நிறுவனமொன்றிற்கு தொழிலாளி (Labourer) தேவை.
நேரில சமுகமளிக்கவும்.
இல: 140, பலாலி வீதி.
திருநெல்வேலி. தொலைபேசி
இல. 021 - 2478. (3786)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**இலங்கை**
யாழ்ப்பாண நிறுவனமொன்றிற்காக
வேலைவாய்ப்புக்கான
**நேர்முகத் தேர்வு**

யாழ்ப்பாணத்தில் உள்ள நிறு வனமொன்றில் சேவை ஆற்று வதற்காக விருப்பம் உள்ள, தொழில் வழிகாட்டுநர் அலுவல கத்தில் பதிவுசெய்துள்ள சமூக வியல், பொருளியல் விசேட பாட மாகக் கொண்ட கலைப் பட்ட தாரிகளும், விவசாயப் பட்ட தாரிகளும் சேவை வழங்குவது சம்பந்தமாக நேர்முகத் தேர்வு நடைபெற உள்ளதனால் தொழில் வழிகாட்டுநர் அலுவலகத்தில் பதிவுசெய்துள்ள மேற்குறிப்பிட்ட பட்டதாரிகளை எதிர்வரும் 18.05.2002 (சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் தமது சுயவிபரக் கோவையுடன் தொழில வழிகாட்டுநர் அலுவலகத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி தொழில் வழிகாட்டுநர் அலு வலகப் பணிப்பாளரினால் வேண டப்படுகின்றர்கள்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம். (C/22149)


# கல்விச்சாலைக் காட்சிகள்



கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம் மங்கள விளக்கேற்றுவதை முதலாம் படத்திலும் -

பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.வரதராஜா உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். வித்தியாலய அதிபர் இ.சிவபாதசேகரம், ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.சுப்பிரமணியம், முகாமைத்துவ உதவியாளர் சி.மேனகை ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். (எ-69)



ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் கலந்துகொண்ட விருந்தினர்களில் ஒருவரான உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் மங்கள விளக் கேற்றுவதை படத்தில் காணலாம். அருகில் யாழ்.மாவட்ட எம்.பி. என். ரவிராஜ், பாடசாலை அதிபர் சி.நாகையா மற்றும் பாடசாலை சமூகத்தினர் காணப்படுகின்றனர். (எ-100)



அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி கள் அண்மையில் நடைபெற்றன.

இந்தப் போட்டிகளில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், அச்சுவேலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் மோட்ரிகே ஆகியோர் பாண்ட்வாத்தியம் சகிதம் மைதானத்துக்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் திருமதி ச.கனக ராசா, முன்னாள் அதிபர் திருமதி பு.கணபதிப்பிள்ளை ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-11)



தேவரையாளி இந்துக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவு நடத்திய கண்காட்சி அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கண்காட்சி நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கல் லூரிச் சமூகத்தினரால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் ம.குட்டித்தம்பி, ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் எஸ். கே.இராஜேந்திரன், போதனாசிரியை செல்வி எஸ்.விஜிதா மற்றும் மாணவர்கள் காணப்படுகின்றனர். (எ)

# இவ்வாண்டில் 3,000 குடும்பங்களை வடக்கில் மீளக்குடியமர்த்த உத்தேசம்

## அமைச்சர் மசூர் தெரிவிப்பு

புத்தளம்,மே16

இவ்வாண்டில் வடக்கில் மூவாயிரம் குடும்பங்களை மீளக் குடியமர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் இரண்டாயிரம் குடும்பங்கள் மன்னாரிலும், தலா 500 குடும்பங்கள் முல்லைத்தீவு மற்றும் வவுனியாவிலும் குடியமர்த்தப்படுவர். 400 முஸ்லிம், 100 சிங்களக் குடும்பங்களும் அவற்றில் அடங்கும்.

வன்னி மாவட்டப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர் புத்தளத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இத்தகவலைத் தெரிவித்தார்.

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்துவது, அவர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவது ஆகியவை தொடர்பான அரசின் கொள்கையை விளக்க கடந்த 14ஆம் திகதி புத்தளம் இஸ்லாமியக் கலாசார மண்டபத்தில் இம்மாநாடு நடைபெற்றது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஏ.ரிசாத் தலைமையில் இடம்பெற்ற மாநாட்டில் பிரதம அதிதியாக புனர்வாழ்வு, அகதிகள் மறுவாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, அமைச்சின் செயலாளர் ஏ.ராஜநாயகம், வடக்கு - கிழக்கு மாகாண விசேட ஆணையாளர் எம்.எம்.மொஹினுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மசூர் மாநாட்டில் தொடர்ந்து கூறியதாவது:-

இடம்பெயர்ந்த மக்களின் முக்கிய தேவையாக இன்று இருப்பது உலர் உணவுதான். உலர் உணவு தாமதமாகக் கிடைப்பதும், கிடைக்கும் பொருள்கள் தரமற்றவையாக இருப்பதுமே பிரச்சினைகளுக்கான முக்கிய காரணங்களாகும். புலிகள் விரும்பி அழைத்தாலும் முஸ்லிம் மக்களை உடனடியாக மீளக்குடியமர்த்துவதைச் செய்ய முடியாது. அவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்புக்கான உத்தரவாதம் தரப்படவேண்டும். நஷ்டஈட்டுக் கொடுப்பனவும் வழங்கப்படவேண்டும். தற்சமயம் தற்காலிகமாகச் சென்று தமது இடங்களைப் பார்த்து வருபவர்களின் வசதிக்காக தற்காலிக இருப்பிட வசதிகள் செய்து கொடுக்கும்படி பணிக்கப்பட்டிருக்கிறது. நிரந்தர குடியேற்றம் படிப்படியாக இடம்பெறும்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஒ)

# மகியங்கனை ஆற்றில் தவறிவீழ்ந்த இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,மே16

தென்பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்த சமயம் மகியங்கனை ஆற்றில் மூழ்கி இறந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

இளைஞர்கள் இருவரும் ஆற்றில் வீழ்ந்த இடத்திலிருந்து சுமார் 30 மைல்கள் தொலைவில் உள்ள பதுளைப் பகுதியில் அவர்களது சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மீட்கப்பட்ட சடலங்கள் இரண்டும் இன்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்படும் என்று [illegible] எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். அடைக்கல மாதா ஆலய இளையோர் மன்ற அங்கத்தவர்கள் தென்பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்ததும் -

அவர்களில் மனோகரன் யூட்ரஞ்சித், தேவராசா சாம்சன் ஆகிய இருவரும் மகியங்கனை ஆற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்ததும் -

தெரிந்தவையே. (ஒ-12சி)

# மந்திகை மருத்துவமனையில் அம்புலன்ஸ்கள் 2; சாரதி ஒருவர்

## இந்த நிலையை மாற்றக் கோரிக்கை

தென்மராட்சி,மே16

மந்திகை ஆஸ்பத்திரியில் இரண்டு அம்புலன்ஸ் வண்டிகள் இருந்தும் ஒரேயொரு சாரதி மட்டுமே அங்கு கடமையில் உள்ளதால் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்படும் அவசர நோயாளர்கள், தனியார் வாகனங்கள் மூலம் யாழ்போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல வேண்டியநிலை காணப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை நெல்லியடிப் பகுதியில் லொறியினால் மோதுண்ட மாணவியைக் கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் சாரதி இல்லாததால் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அந்த மாணவி யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டார்.

அன்றைய தினம் இரவு 9 மணிக்கு பாம்பினால் கடியுண்ட நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட சுப்பர்மடத்தைச் சேர்ந்த குபேந்திரகுமார் கிருஷ்ணகுமார் (வயது 8) என்னும் சிறுவன் இரண்டு மணிநேரத்தின் பின்னர் தனியார் வாகனம் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

வாகனம் கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தால் நோயாளிகள் உயிரிழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் -

அதனால் அம்புலன்ஸ் வண்டிச் சாரதியாக மேலும் ஒருவரை பணிக்கு அமர்த்துமாறும் -

பொதுமக்கள் கோரி வருகின்றனர். (ஒ-117)

# தடை செய்யப்பட்ட கடற் பகுதியில் மீன் பிடித்த 26 மீனவர்கள் கைது!

## திருமலை நீதிமன்றத்தில் ஆஜர்

திருகோணமலை,மே16

தடைசெய்யப்பட்ட கடற் பிரதேசத்தில் மீன் பிடித்ததாகக் கடற்படையினரால் 26 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். திருகோணமலை துறைமுகப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட அவர்கள் நேற்று திருகோணமலை நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

'லங்கா சிப்பிங் லைன்ஸ்"க்குச் சொந்தமான கப்பல் மூலம் மீன்பிடிப்பதில் ஈடுபட்டிருந்த இம்மீனவர்களில் 22பேர் சீனர்கள், நால்வர் இலங்கையர்.

'பூயுவன்யூ - 226' என்ற பெயர் கொண்ட அக்கப்பலைத் திருமலைக் கடற்படையினர் கைப்பற்றியிருக்கின்றனர்.

கடந்த 13ஆம் திகதி இரவு இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். தமக்கென ஒதுக்கப்பட்ட ஆள்கடல் பகுதியைப் விடுத்து, தடைசெய்யப்பட்ட கடற்பிரதேசத்தில் மீன்பிடித்ததால் அவர்களைக் கடற்படையினர் கைதுசெய்தனர் என்றும் - பின்னர் தம்மிடம் ஒப்படைத்தனர் என்றும் - திருமலைப் பொலீஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட கப்பலுக்குச் சொந்தக்காரரான பி.ஏ.பி.கித்சிறி கூறியதாவது:-

கைப்பற்றப்பட்ட கப்பல் எனக்குச சொந்தமானது. இதற்கான பதிவு மற்றும் சட்டப்படியான ஆவணங்கள் என்னிடம் உள்ளன. கொழும்பு வர்த்தகத் துறைமுகத்துக்குள் நுழைவதற்கான அனுமதியும் பெற்றுவந்திருக்கிறேன். சம்பவதினம் இரவு இயந்திரக் கோளாறு காரணமாக எனது கப்பல் மட்டக்களப்பு கரைப் பிரதேசத்தை அடைந்தது. ஆயினும் குறிப்பிட்ட எல்லைக்குள் நங்கூரமிட்டு தரித்து நின்றுவிட்டது. அது தடைசெய்யப்பட்ட பிரதேசம் என்று கடற்படையினர், மீனவர்களைக் கைது செய்து திருமலைத் துறைமுகப் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர். எனது கப்பல் திருமலைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஒ)

### மந்துவில் ஸ்ரீ பாரதி வேறிடத்தில்

யாழ்ப்பாணம்,மே16

கரவெட்டி நாவலர்மடத்தில் இதுவரை இயங்கிவந்த யா/மந்துவில் ஸ்ரீ பாரதிவித்தியாலயம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள ஏசியன் கல்வி நிலையத்தில் இயங்கும் என வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

# பளைப் பாடசாலைகள் மூன்று மீண்டும் சொந்த இடங்களில்

தென்மராட்சி,மே16

பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகள் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் சொந்த இடங்களில் மீள இயங்கவுள்ளன.

புலோப்பளை றோ.க.த.க. பாடசாலை, மாசார் அ.த.க. பாடசாலை, முகாவில் அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளே இவ்வாறு இயங்கவுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தென்மராட்சி கல்வி வலயத்திற்கு அறிவித்துள்ளதாக பளைக் கோட்டக்கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை தெரிவித்தார்.

முகாவில் அ.த.க. பாடசாலை தவிர்ந்த ஏனைய இரு பாடசாலைகளின் கட்டடங்கள் சேதமடைந்துள்ளபோதிலும் மீளக் குடியமர்ந்த மாணவர்களின் நலன்கருதி இப்பாடசாலைகள் திருத்தப்பட்டு இயங்கவுள்ளதாகவும் -

பிரதேசத்தில் உள்ள ஏனைய பாடசாலைகள் மூன்றாம் தவணை ஆரம்பத்துடன் மீள ஆரம்பிக்கப்படுமெனவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# திருமலைக் கடற்பரப்பில்

# வெடிபொருளைப் பயன்படுத்தி மீன்பிடிக்க புலிகள் தடைவிதிப்பு

திருகோணமலை,மே16

திருகோணமலைக் கடற்பரப்பில் வெடிபொருள்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதை முற்றாகக் கைவிடுமாறு அப்பிரதேச மீனவர்களை விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் கடல்வளத்தைப் பாதுகாக்கவும் கடற்றொழிலாளர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டும் கடலில் வெடிபொருள்களைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது முற்றாகத் தடைசெய்யப்படுகிறது.

இத்தடையானது எதிர்வரும் 15.05.2002 (நேற்று முதல்) நடைமுறைக்கு வருகிறது. சகல கடற்றொழிலாளர்களும் இதனைக்கவனத்தில் எடுத்து செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படிக்கு, அரசியல்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், திருகோணமலை மாவட்டம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் பலத்த அதிர்வுகளை வெளியிடும் வெடிபொருளை வெடிக்க வைத்து அதன்மூலம் இறந்து மிதக்கும் மீன்களைப் பிடிக்கும் பழக்கம் மீனவர்களிடையே நிலவுகிறது. இந்த முறையின் மூலம், மீன்குஞ்சுகள் உட்பட வேறு கடல் உயிரினங்களும அழிவுக்குள்ளாவது குறிப்பிடத்தக்கது. (ஒ-145)

### ஊருண்டிப் பகுதியில் கடற்படையினர் மீண்டும் முகாம்

ஊர்காவற்றுறை,மே16

ஊர்காவற்றுறை ஊருண்டிப் பகுதியில் உள்ள பத்து வீட்டுத் திட்டப்பகுதியில் இருந்து அண்மையில் வெளியேறிய கடற்படையினர் மீண்டும் அவ்விடத்தில் முகாமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் பொதுமக்கள் தத்தமது வீடு, வளவுகளில் மீளக் குடியமரும் நோக்கத்துடன் அவற்றை துப்புரவு செய்து வந்ததாகவும் -

எனினும், மீண்டும் அவ்விடத்தில் கடற்படையினர் முகாமிட்டிருப்பதால் மீளக்குடியமர்வில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது.(ஒ-16)

# இன்று நிலாவெளியில் புலிகளின் பணிமனை திறப்பு

திருகோணமலை,மே16

தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை தனது அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் பொருட்டு இன்று பிற்பகல் 3 மணிக்கு நிலாவெளி (கோபால்புரம்) பத்தாம் கட்டையில் அரசியல் பணிமனை ஒன்றை திறக்கிறது.

பணிமனைத் திறப்பு விழாவில் நிலாவெளிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் தூயவன் உட்பட புலிகளின் பிரமுகர்கள் பலரும் பொது மக்களும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ)

# சேது சமுத்திரத் திட்டம்; ஒப்பந்தம் கைச்சாத்து

மதுரை,மே16

சேது சமுத்திரத் திட்டம் பற்றிய தொழில்நுட்ப சாத்தியக்கூறு ஆய்வை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துறைமுகச் சபையும் தேசிய சுற்றாடல், பொறியியல் ஆராய்ச்சி நிறுவனமும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கின்றன.

ஆழமற்ற மன்னார் வளைகுடா கடலை ஆழமாக்கி தமிழ்நாட்டுக்கு கடல் வழியே கப்பல் பயணம் செய்ய வழி வகுப்பதே சேது சமுத்திரத் திட்டமாகும்.

தற்பொழுது கப்பல்கள் இலங்கையைச் சுற்றி 450 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்தே பயணம் செய்கின்றன.

## தேர்தல் நடைபெறவிருக்கும்

# 7உள்ளூராட்சி மன்றப் பகுதிகளில் வன்முறைகள் வெடிக்கும் ஆபத்து!

## 'பவ்ரல்' அமைப்பு எச்சரிக்கை

கொழும்பு,மே16

எதிர்வரும் 20ஆம் திகதி தேர்தல் நடைபெறவிருக்கும் 17 உள்ளூராட்சி மன்றங்களில் 7 உள்ளூராட்சி மன்றப் பகுதிகளில் வன்முறைகள் தலைதூக்கக் கூடிய ஆபத்து இருந்து வருகிறது.

தேர்தலை அவதானிக்கும் 'பவ்ரல்' அமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறது.

கொழும்பு, காலி மாநகரசபைப் பகுதிகள், கட்டுநாயக்க - சீதுவ, பாணந்துறை, மொனராகலை, புத்தளம், நாததாண்டியா ஆகிய உள்ளூராட்சி மன்றப் பகுதிகள் ஆகியவற்றில் இத்தகைய ஆபத்து உள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே தேர்தல் வன்முறைகள் குறித்து 20 முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. தேர்தல் தினத்தில் 2000 கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுபடுவர் என்றும் அந்த அமைப்புத் தெரிவிக்கின்றது. (ஒ)


உ

கோண்டாவில் கிழக்கு

அருள்மிகு ஸ்ரீ ஞானப் பழனி முருகன் ஆலய மஹோற்சவம் - 2002

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | - 16.05.2002 வியாழன் 10.30 மணி | "இறையின்பம்" |
| 2ஆம் திருவிழா | - 17.05.2002 வெள்ளி | "சைவ நீதி" |
| 3ஆம் திருவிழா | - 18.05.2002 சனி | "மூவர் காட்டும் வாழ்வு" |
| 4ஆம் திருவிழா | - 19.05.2002 ஞாயிறு | "சேக்கிழார் காட்டும் தாய்மை" |
| 5ஆம் திருவிழா | - 20.05.2002 திங்கள் | "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" |
| மாம்பழத் திருவிழா | - 21.05.2002 செவ்வாய் 12.00 மணி | |
| | பூச்சப்பரம் இரவு 7 மணி | "பட்டினத்தார் பாடிய மூவர்" |
| கைலாச வாகனம் | - 22.05.2002 புதன் இரவு 7 மணி | "வீடும் வேண்டா விறலினர்" |
| சப்பரம் | - 23.05.2002 வியாழன் மாலை 7மணி | "பண் சுமந்த பாடல்" |
| தேர் உற்சவம் | - 24.05.2002 வெள்ளி பகல் 9 மணி | |
| | மாகேஸ்வர பூசை பகல் 1 மணி | "கோயிலும் நாமும்" |
| தீர்த்த உற்சவம் | - 25.05.2002 சனி பகல் 9.30 மணி | |
| | கொடி இறக்கம் மாலை 5.30 மணி | "நானேயோ தவம் செய்தேன்" |

- தினமும் மாலை 6 மணிக்கு திரு.V.K.கானமூர்த்தி குழுவினரின் "மேளக் கச்சேரி" இடம்பெறும்
- மேற்படி தலைப்புகளில் தினமும் இரவு 8 மணிக்கு திரு.க.சிவராமலிங்கம் அவர்களின் சமய சொற்பொழிவுகள இடம்பெறும்.

அன்பளிப்பு: (3802) - பரிபாலன சபையினர்.

ஐங்கரன் புடவை அன் அழகு சாதன மாளிகை, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.

சுதா பல்பொருள் களஞ்சியம், பலாலி வீதி, கோண்டாவில்.

தபேஷன் விவசாய மாளிகை, பலாலி வீதி, கோண்டாவில்.

சோதி ஸ்ரோர்ஸ் பல சரக்கு வியாபாரம், இருபாலை வீதி, கோண்டாவில்.

## நாடு பிளவுபடமாட்டாது என்ற பிரதமர் ரணிலின் வாக்குறுதியால் சமாதான முயற்சியில் நம்பிக்கை

### இப்படிக் கூறுகிறார் கருணாரட்ன

கொழும்பு,மே16

நாடு எச்சந்தர்ப்பத்திலும் பிளவுபடுத்தப்படமாட்டாதென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருப்பது அரசின் சமாதான முயற்சி மீது நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

இவ்வாறு புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், அங்கு கூறியதாவது:-

நாட்டைப் பிளவுபடுத்தாத வகையில் தீர்வு காண்பதற்காகப் பிரதமர் தெரிவித்திருப்பது சமாதான முயற்சிகள் மீது நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. சமாதான முயற்சிகள் அரைகுறை தீர்வாக ஒருபோதும் அமைந்துவிடக்கூடாது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜே.வி.பியும் இனத்துவேசப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த இரு கட்சிகளும் தொழிலாளர்களுடனும், இடதுசாரிக் கட்சிகளுடனும் இணைந்து சமாதான முயற்சிகளைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இந்தக் கட்சிகள் சமாதான எதிர்ப்புத் திட்டங்களைத் தீட்டி வருகின்றன.

'கௌரவமாக சமாதானம்' என்ற தொனிப் பொருளில் ஜே.வி.பி. மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அபாயகரமானவை. எதிர்க்கட்சித் தலைவர் ஆட்சேபங்களைத் தெரிவித்துக் கொண்டே இருப்பது நாட்டில் நிரந்தரமான சமாதானம் ஏற்படுவதை எதிர்க்கட்சி விரும்பவில்லை என்பதை வெளிக்காட்டுகின்றது. (ஒ-12-6)

## கற்கோவளத்தில் திருடர் கைவரிசை! ஊழியரின் சீருடைகளும் அபேஸ்!!

தென்மராட்சி,மே16

வடமராட்சி கற்கோவளம் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். வீட்டின் வெளியே காணப்படும் பொருள்களைத் திருடர்கள் இரவு வேளைகளில் அபகரித்துச் சென்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர் கழுவி உலரப் போட்டிருந்த சீருடைகளையும் அங்கு காணப்பட்ட அவரது புதிய சைக்கிளையும் திருடர்கள் அபகரித்துச் சென்றனர். சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த ஊழியரின் அடையாள அட்டைகளும் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டனவாம்.

மற்றொருவர் தொழிலுக்குச் செலவதற்காக வெளியில் வைக்கப்பட்டிருந்த மீன்பிடி உபகரணங்களும் அபகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## மாநகராட்சியின் இடத்திலிருந்து 'சலுசல' வெளியேற மறுக்கிறதாம்

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.மாநகரசபைக்குச் சொந்தமான நவீன சந்தைக் கடைத்தொகுதியில் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதிக்கும் மேலாக 'சலுசல' நிறுவனத்தினர் அங்கிருந்து வெளியேறாது, மாதாந்த வாடகையும் தராது இருந்து வருவதாக யாழ்.மாநகராட்சி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 96ஆம் ஆண்டு ஜூலை மாதம் வழங்கப்பட்ட 3 மாதகால தற்காலிக அனுமதியைப் பயன்படுத்தி தொடர்ந்து 6 வருடங்களாக 'சலுசல' நிறுவனம் அங்கு இயங்கி வருவதால் மாநகரசபை நிர்வாகத்துக்கும் நடைமுறைச்சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கேள்வி நடைமுறையின்மூலம் அதிக பணத்தைக் கொடுத்து இந்தக் கடைத் தொகுதியில் 'பாட்டா' காலணி நிறுவனத்தினர் பல வருடங்களாக இயங்கியதாகவும் -

95ஆம் ஆண்டு நடந்த இடம்பெயர்வை அடுத்து அவர்கள் வெளியேறிய பின்னர் மூடப்பட்டிருந்த இந்தக் கடைத் தொகுதியை 'சலுசல' நிறுவனத்தினருக்கு மாநகரசபை 3 மாதங்களுக்கு மட்டுமே வழங்கியதாகவும் - ஆனால், இன்றுவரையும் கடைத் தொகுதியைவிட்டு 'சலுசல' நிறுவனம் வெளியேறவில்லை எனவும் - அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

1996ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இருந்து கடைத் தொகுதியை விட்டு வெளியேறுமாறு 'சலுசல' நிறுவனத்தைக் கேட்டு வருகின்றபோதும், தமக்குப் பொருத்தமான மாற்றிடம் கிடைக்கவில்லை என அந்த நிறுவனம் கூறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ஜெனதா பாலசிங்கம் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி பார்வதி வல்லிபுரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*

யா/தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, கொக்குவில்.

(3796)



## மரண அறிவித்தல்

### திருமதி கனகரத்தினம் பரமேஸ்வரி

திருமதி கனகரத்தினம் பரமேஸ்வரி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் பரமேஸ்வரன் (ஜேர்மனி), கனகேஸ்வரன் (ஆசிரியர், யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, நெல்லியடி மொடேன் கல்வி நிலையம்), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னம்மா, காலஞ்சென்ற பாக்கியலஷ்மி, தங்கம்மா, செல்லத்துரை, கோபாலகிருஷ்ணன், சிவானந்தகிருஷ்ணர் (பிரதி அதிபர், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயந்தினியின் அன்பு மாமியும் துர்க்கா, பரணீகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.கனகேஸ்வரன் (மகன்)

*இந்திரன் அம்மன் கோயிலடி,*
*செம்பாடு, துன்னாலை மத்தி,*
*கரவெட்டி.*

(C/22152)


## கொடிகாமத்தில் வீதியோரங்களில் சைக்கிள் விடமுடியாது

தென்மராட்சி,மே16

கொடிகாமம் நகர்ப்பகுதி தற்போது பிரதான போக்குவரத்துப் பிரதேசமாக மாறிவருவதால் நகரில் வீதியோரங்களில் சைக்கிள்கள் விடுவது பிரதேச சபையினால் தடைசெய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் வர்த்தகநிலையங்கள் உள்ள கண்டி வீதி, பருத்தித்துறை வீதி, கச்சாய் வீதி ஆகியவற்றில் சைக்கிள்கள் விடவேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## படிவம் தேடி அலையும் மக்கள்

தென்மராட்சி,மே16

தென்மராட்சி பிரதேசத்தில் மீளக் குடியேறிய மக்கள் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு பெறுவதற்கான படிவம் வாங்குவதற்காக பிரதேச செயலகத்திற்குப் படையெடுத்து வருகின்றனர்.

பிரதேச செயலகத்தினால் இவ்வாறான படிவம் ஏதும் விநியோகிக்காதபோதிலும் இப்படிவம் பெறுவதற்கு மக்கள் அலைவது தொடர்பாக பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் விசனம் தெரிவிக்கப்பட்டது. (க-117)

## பயிற்சிமுடிந்த ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே16

பலாலி மற்றும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் இருந்து தமது பயிற்சியை நிறைவுசெய்துகொண்டு வெளியேறும் யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த நிரந்தர ஆசிரியர்கள் அனைவரையும் முன்பு கடமையாற்றிய பாடசாலைகளில் கடமையாற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்காலிக இணைப்புப் பெற்று யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்கள் தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் கடமையாற்றுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10-ரி)

## வலி.மேற்கில் புதிய கிணறுகள் அமைப்பு

வலி.மேற்கு,மே16

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சர்வோதய அமைப்பினால் விவசாயக் கிணறுகள் அமைக்கப்படவுள்ளன.

இதன்படி சுழிபுரம் கிழக்கு, அராலி தெற்கு ஆகிய இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இரண்டு புதிய கிணறுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் -

சங்கானை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிணறு ஒன்று புனரமைக்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (ஒ-175)

## கூட்டுறவுச் சங்க பெற்றோல் நிலையம்

அரியாலை,மே16

முற்றவெளியில் அமைந்திருக்கும் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விற்பனவு நிலையத்தில் பாவனையாளர்கள் பெற்றோலைத் தாராளமாகப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி நிலையத்தில் பெற்றோல் விநியோகம் கடந்த 6ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-17)

## வீதி திருத்தம்

அரியாலை,மே16

ஈச்சமோட்டை பிரதான வீதி தார் ஊற்றிப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

ஈச்சமோட்டையில் இருந்து கடற்கரை வீதிக்குச் செல்லும் பாதை கடந்த பல வருடங்களாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் குண்டுங் குழியுமாகக் காணப்பட்டது. (ஐ-17)

## போசாக்கு வார கருத்தரங்கு

தேசிய போசாக்கு வாரத்தையொட்டி செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள 75பேரும் கடந்த திங்களன்று போசாக்குக் கருத்தரங்கினை மந்திகை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடத்தினர்.

இக்கருத்தரங்கில் கர்ப்பிணிகள், சுகாதாரத் தொண்டர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-117)

## சமூக சேவையாளரின் சடலம் மருத்துவபீடத்தில் ஒப்படைப்பு

அளவெட்டி,மே16

மருத்துவபீட மாணவர்களின் கற்கைநெறி பரிசோதனைகளுக்காக சமூகசேவையாளர் ஒருவரது சடலம் யாழ்.மருத்துவபீட உடற்கூற்றியல் துறையினிடம் நேற்றுக் காலை 10 மணிக்கு வழங்கப்பட்டது.

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தரும், சமூகசேவையாளருமான இளையதம்பி பொன்னுத்துரை (வயது 80) என்பவரது உடலே இவ்வாறு கையளிக்கப்பட்டது. தான் இறந்த பின்னர் தனது உடலை மருத்துவபீடத்திற்கு கொடுத்துவிடுமாறு 10வருடங்களுக்கு முன்பே இவர் தனது குடும்பத்தவரிடம் கூறியிருந்தார் என்றும் -

அவரது விருப்பத்துக்கிணங்க அவரது பிள்ளைகள் உடலைக் கையளித்தனர் என்றும் -

மருத்துவபீடத்தினர் தெரிவித்தனர்.

மேலும் மருத்துவபீட மாணவர்களின் கற்கைக்கு உதவும் பொருட்டு பலர் தமது உடலை ஒப்படைப்பதற்கான சம்மதக் கடிதங்களை பீடாதிபதி அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சிதைவற்ற நிலையில் உரிமை கோரப்படாத சடலங்களையும், வயோதிபர் இல்லங்களில் மரணிப்போரின் சடலங்களையும் பெற்றே உடற்கூற்றியல்துறைக் கற்கைநெறிகள் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-13-ரி)

## கலந்துரையாடல் விவகாரம்: மாநகர ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.மாநகராட்சி மன்றத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கான அழைப்பு புளொட் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ச.ஜெயச்சந்திரனுக்கு அனுப்பப்படாமைக்கு தறசெயலாக நேர்ந்த தவறே காரணம் என்று யாழ்.மாநகராட்சி ஆணையாளர் இ. இராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 8ஆம் திகதி 'உதயன்' பத்திரிகையில் 'மாநகராட்சி மன்ற சபையில் நடந்த கலந்துரையாடலுக்கு அழைப்பில்லை - புளொட் உறுப்பினர் கண்டனம்' என்ற தலைப்பில் வெளியான செய்தி தொடர்பாக அனுப்பிய விளக்கத்திலேயே இதனை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் தெரிவித்திருப்பதாவது:-

நடமாடும் சுகாதார சேவைகள் தொடர்பான இறுதி முடிவுகளை எடுக்கும் நோக்கோடு மாநகர சபை முதல்வரின் தலைமையில் எனது அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலுக்கு சுகாதாரக் குழுத் தலைவரும், கௌரவ சுகாதாரக் குழு அங்கததவர்களும், மாநகர சபையின் திணைக்களத் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

வழமையாகக் கூட்டங்களுக்கு அழைப்புக்களை அனுப்பும் உத்தியோகத்தர் விடுமுறையில் நின்றதால் பிரிதொரு உத்தியோகத்தரே தனது வழமையான பணிகளுக்கு மத்தியில் மேற்படி கூட்டத்திற்குரிய அழைப்புக்களையும் அனுப்பும்போது தற்செயலாக - தவறுதலாகவே கௌரவ சுகாதாரக்குழு அங்கத்தவரான திரு.ச.ஜெயச்சந்திரனுக்குரிய அழைப்பை அனுப்பத்தவறியுள்ளமை எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இச்செயலுக்கான காரணத்தை உடன் அறியத்தருமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் என்னால் கோரப்பட்டுள்ளார்.

- இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-10)

## விவசாயக் காணி விவரங்கள் திரட்டப்படுகின்றன

வலிகாமம்,மே16

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் விவசாயச் செய்கைகளை மேற்கொண்டுள்ள காணிகளின் விவரங்கள் குறிச்சிகள் மற்றும் கிராமங்கள் ரீதியாகத் திரட்டப்படுகின்றன.

கிராம உத்தியோகத்தர்களை மேற்படி விவரங்களைத் திரட்டி இம்மாதம் 27ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் எஸ்.இரத்தினம் பணித்துள்ளார். (ஒ-175)

## மாகாண அமைச்சு ஊழியரின் இடமாற்றங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த உத்தரவு

நவாலி,மே16

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணிபுரியும் மாகாண அமைச்சைச் சேர்ந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடமாற்ற உத்தரவுகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் சகல பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். இது சம்பந்தமாக அவர் அனுப்பிவைத்துள்ள சுற்றுநிருபத்தில் குறித்துரைக்கப்பட்ட இடமாற்றங்கள் 01.04.2002 முதல் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை அநேக இடமாற்றங்கள் நடை முறைப்படுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே இந்த இடமாற்றங்கள் தொடர்பாக மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது பிற்போடப்பட்ட இடமாற்ற உத்தரவுகளைத் தவிர ஏனைய இடமாற்றங்களை உடனடியாகச் செயற்படும் வண்ணம் நடைமுறைப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-100)


உ

சிறுப்பிட்டி மேற்கு

## அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் திருக்கோயில்

### அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் - 2002

நிகழும் சித்திரபானு வருடம் 2ஆம் நாள் இன்று (16.05.2002) வியாழக்கிழமை முதல் பதினொரு நாள்களுக்கு எம் பெருமானுக்கு உற்சவம் நடைபெறத் திருவருள் பாலித்திருப்பதால் அடியார்கள் யாவரும் வருகைதந்து வணங்கி அருள்பெறுக.

**16.05.2002 தொடக்கம் தினசரி மாலை 6-30 மணிக்கு ஆரம்பம்.**

**23.05.2002 வேட்டை**
**24.05.2002 சப்பறம்**
**25.05.2002 தேர் காலை 11 மணிக்கு**
**26.05.2002 தீர்த்தம் காலை 10 மணிக்கு**

**சொற்பொழிவு**

*வழங்குபவர்: சொல்வாரிதி இரா.கேதீசன்*

*உற்சவகுரு: கிரியாகலாபமணி சி. கிருஷ்ணசாமிக்குருக்கள்*

(புன்னாலைக்கட்டுவன்)

**- தேவஸ்தான பரிபாலனசபை.**

(3792)

# கொழும்பு - யாழ். பஸ் சேவையின் பெயரால் பணம் கறக்கும் வேலை தெற்கில் துரிதம்

கொழும்பு,மே16

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நேரடி பஸ்சேவை என்ற பெயரில் தமிழ்ப் பயணிகளை ஏமாற்றிப் பணம் கறக்கும் மோசடிகள் நடைபெற்று வருகின்றன என்று பயணிகள் முறையிடுகின்றார்கள்.

கொழும்பு புறநகர்ப் பகுதிகளான வெள்ளவத்தை, தெகிவளை ஆகிய இடங்களிலேயே இந்த மோசடிகள் இடம்பெறுகின்றன என்றும் பயணிகள் கூறுகின்றார்கள்.

யாழ் - கொழும்பு சேவை எனக் குறிப்பிட்டு தினமும் இரவில் பல பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன. தொலைத் தொடர்பு தனியார் நிறுவனங்கள் பஸ்களுக்கான பயணச்சீட்டுப் பதிவுகளை மேற்கொள்கின்றன. கட்டணமாக 600 ரூபா முதல் 1,200 ரூபா வரை அறவிடப்படுகிறது.

குறிப்பிட்டபடி பஸ்கள் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் புறப்படுகின்றன. ஆனால், அந்த பஸ்கள் யாழ்ப்பாணத்தைச் சென்றடைவதில்லை.

இந்த பஸ்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்ததும் அங்கு நிறுத்தப்படும். பயணிகள் பஸ்வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வருகின்றனர் என்று பஸ்காரர்கள் கூறுவார்கள்.

விசாரணை செய்யும் விடுதலைப் புலிகள் உண்மையைக் கண்டுபிடித்து விடுவார்கள். பயணிகள் அனைவரையும் இறக்கி விட்டு பஸ்களைத் திருப்பி அனுப்பி விடுகின்றனர். பயணிகளை நடுத்தெருவில் விட்டுவிட்டு பஸ்காரர்கள் கொழும்புக்குப் பறந்து விடுவார்கள்.

யாழ்ப்பாணம் வரை பணம் கொடுத்துப் புறப்பட்ட பயணிகள் வேறு வழியின்றி சிரமங்களுக்கும் அலைச்சல்களுக்கும் மத்தியில் வேறு வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணத்தைச் சென்றடைகின்றனர்.

இந்த ஏமாற்று வேலை ஒரே நாளில் முடிந்துவிடுவதில்லை. தொடர்ந்து நடைபெறுகிறது.

இதற்கிடையே -

கடந்த ஞாயிற்றுக்கிழமை இதனையும் மிஞ்சும் மிகப் பெரிய ஏமாற்று வேலை ஒன்று இடம்பெற்றதாகப் பயணிகள் கூறுகிறார்கள்.

வெள்ளவத்தையில் இருந்து அதிசொகுசு பஸ்வண்டி ஒன்று யாழ்ப்பாணம் செல்வதாக அறிவிக்கப்பட்டது. தொலைக்காட்சி வசதி, கழிப்பிட வசதி ஆகியவற்றுடன் கட்டணமாக 1,150ரூபா அறவிடப்பட்டது. பயணச்சீட்டிலும் இந்த வசதிகள் எல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தன.

இரவு 11 மணியளவில் கொழும்பிலிருந்து புறப்பட்ட பஸ் அதிகாலை 5 மணியளவில் தாண்டிக்குளத்தைச் சென்றடைந்தது.

பஸ்ஸிற்கான பத்திரங்கள் இல்லாத காரணத்தால் நண்பகல் ஒரு மணிவரை தாண்டிக்குளத்தில் பஸ் காத்திருந்தது. பின்னர் ஓமந்தையூடாகப் புலிகளின் பகுதிக்குச் சென்றது. அங்கே தமிழீழ போக்குவரத்துக் கழக பஸ்ஸில் பயணிகள் ஏற்றப்பட்டனர். அந்த பஸ்ஸின் பின்னால் இந்தச் சொகுசு பஸ் முகமாலை வரை பின் தொடர்ந்தது. முகமாலையைச் சென்றடைய மாலை 5 மணியாகிவிட்டது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து மீண்டும் சொகுசு பஸ்ஸில் பயணிகள் ஏற்றப்பட்டனர். பஸ இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றது.

மாலை 5 மணியாகிவிட்டதால் இராணுவத்தினர் சொகுசு பஸ்ஸை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டனர். இதனால் பஸ் அன்று இரவு முழுவதும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையிலே உள்ள மனித நடமாட்டமற்ற பகுதியில் தரித்து நின்றது. கண்ணிவெடிகள் சரியாக அகற்றப்படாத நிலையில் உள்ள அந்தப் பகுதியில் பிரயாணிகள் பஸ்ஸை விட்டு இறங்கவும் முடியாமல் - உள்ளே இருக்கவும் முடியாமல் தவியாய்த் தவித்தனர்.

மறுநாள் காலை பத்து மணியளவிலேயே பஸ் யாழ். நகரைச் சென்றடைந்துள்ளது. 36 மணிநேரப் பய்ணத்தில் பஸ்ஸில் இருந்த பயணிகள் கழிப்பிடம் பயன்படுத்த முடியாதவாறு பூட்டப்பட்டிருந்ததாம்.

இவ்வாறாக பல்வேறு மோசடிகளுக்கு மத்தியிலேயே யாழ். - கொழும்பு பஸ் சேவை நடைபெறுவதாகப் பயணிகள் முறையிடுகின்றனர்.

இது பற்றிக் குறிப்பிட்ட தொலைத தொடர்பு நிலையங்களிடம் விசாரித்தால் ஆசனப்பதிவு செய்வது மட்டுமே தமது வேலை என்று சொல்கின்றனர். பஸ்காரர்களுடன் தொடர்பு கொள்ள விவரம் கேட்டால், விவரங்கள் தங்களிடம் இல்லை. என்று தட்டிக்கழித்து விடுகின்றனர். (ம)

## குடாநாட்டில் டெங்கு பரவும் அபாயம்!

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.குடாநாட்டுப் பகுதியில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் தோன்றியுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஒரு பெண் நோயாளி டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பது தெரியவந்திருக்கிறது. கொழும்பில் இருந்து கிடைத்த அவரது இரத்த பரிசோதனை அறிக்கையில் அது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி இளம் பெண்ணே டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவராவார். கடந்த 4ஆம் திகதி இவருக்குக் காய்ச்சல் ஆரம்பமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

## மாடு தேடி காடு சென்ற இரு சிறுவர்கள் காயம

மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கித்துள் காட்டுப் பகுதியில் மாடு தேடிச் சென்ற இரு சிறுவர்கள் வெடி பொருளில் சிக்கிக் காயமடைந்துள்ளனர்.

தியாகராஜா(வயது -13), வசந்தராஜன்(வயது - 14) ஆகிய இரு சிறுவர்களே காயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

வசந்தராஜன் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக சிகிச்சைக்காக தியாகராஜா மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (ம)

### தென்னிலங்கையிலிருந்து

# மூன்றாவது வர்த்தகர்கள் குழு இன்று யாழ்ப்பாணம் வருகிறது

யாழ்ப்பாணம்,மே16

தெற்கிலிருந்து 38 வர்த்தகர்கள் அங்கம் பெறும் மூன்றாவது வர்த்தகத் தூதுக்குழு இருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

தேசிய வர்த்தக சம்மேளனத்தின் ஏற்பாட்டில்வரும் இந்தத் தூதுக்குழுவில் பல்துறை சார்ந்த வர்த்தகர்களும் இடம்பெறுகின்றனர்.

இன்றுவரும் குழுவினர் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ்.ப.நோ.கூ.சங்க மண்டபத்தில் வர்த்தக சம்மேளன, யாழ்ப்பாணம் கைத்தொழில் நிறுவன பிரதிநிதிகளைச் சந்திப்பர்.

நாளை காலை 10 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை யாழ். வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகளை அவர்களது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடுவர்.

இக்குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள் வருமாறு:-

★ ஏசியா காட் புலோட்கிளாஸ் நிறுவனம் - ஆர்.ராஜேந்திரன் (பிராந்திய முகாமையாளர்).

★ டக்ளஸ் அன்சன்ஸ் லிமிட்டட் - பேசில் தசநாயக்க (சந்தைப்படுத்தும் முகாமையாளர்), எச்.யு. அநுர பெர்னாண்டோ (விற்பனை முகாமையாளர்).

★ டெல்மேஜ் பேர்விஜ் லிமிட்டட் - டாக்டர் கமால் வீரம்பெரும (பிரதம அதிகாரி), றொசான் குணவர்த்தன (முகாமையாளர் வர்த்தக அபிவிருத்தி).

★ யுனட்டட் பினர்ன்ஸியல் நிறுவனம் - லலித் வசந்தமெண்டிஸ் - தலைவர்.

★ சவுத சியோன் ஓட்டோ றேடர்ஸ் - கீர்த்தி முடலிகே.

★ டொன் வின்டஸர் நிறுவனம் - முடித வின்டஸர்.

★ வெஸ்வ் - ரெக் இன்ரநஷனல் - என்.எம்.எதிரிவீர (தலைவர்).

★ கூல் கிங் ரிவ் என்ஜினியேர்ஸ் - மகேந்திர திலக செனவிரத்ன (பிரதம பொறியியலாளர்), நுவான் டி றொட்றிக்கோ.

★ அலையன்ஸ் பைவ் லிமிட்டெட் - றொஹான் கிறோகரி இருகலபண்டார (நிர்வாக முகாமையாளர்), பற்றிக் சுரக்ஸ் (பணிப்பாளர்), ஜி.வி. பெர்னாண்டோ (பணிப்பாளர்).

★ ஈ.ரி.ஏ. (லங்கா) லிமிட் - ஜே. என்.வீரக்கோன் (பொதுமுகாமையாளர்), ஏ.ஜே.எஸ.மத்தாஸ் (பிரதி பொது முகாமையாளர்), எஸ்.எம்.ஜபாறா, லக்ஸ்மன் மகேஸ் ஜயசிங்க.

★ றொஹான் றொட்ரிக்கோ - கே.பி.றொட்ரிக்கோ (பணிப்பாளர்), எஸ்.யோகேந்திரன்.

★ ஏ அன் ஏ இன்ரநஷனல் - திருமதி ராணி ரத்னாயக்க - நிர்வாகி.

★ ஜபார்ஜி சகோதரர்கள் - எம்.ஐ.ஜபார்ஜி.

★ நவலோகா - எஸ்.எஸ்.குணதாஸ (நிர்வாகி).

★ ரான்ஸ்மி இன்ஜினியேர்ஸ் - ஏ.டி.லிகின்கடுவ, றோஹான் பெர்னாண்டோ.

★ ஸ்ரீல்பீட் றேடிங் - எம்.ஆர். தாகா (பொதுமுகாமையாளர்), பி.பி. ஏ.மஜீத்.

★ ஸ்ரீல்ரீ - ஜி.எஸ்.ஜெயவர்த்தன (விற்பனை முகாமையாளர்).

★ கிலின்ரன் சைக்கில் - எம். எம்.முக்தார் (பணிப்பாளர்).

★ கே.டி.ஏ.வீரசிங்க அன்கோ.- ரி.டி.நேசகுமார் (நிதிமுகாமையாளர்).

★ ஜெனரல் சேல்ஸ் கோ - ரவி சேனநாயக்க (பொதுமுகாமையாளர்).

★ சந்திரா ஹாட்வெயர்ஸ் - பி.சிறீதரன் (உரிமையாளர்).

★ என்.எவ்.சி.மைக்கன் - செல்வி ஜே.சுபா (முகாமையாளர்), ஜெராட் புல்கம் (ஆலோசகர்).

★ வண்டி கோர்பரேசன் - பிராங் வண்டபுட் (தலைவர்).

★ அசோசியட் மோட்டோர்ஸ் - ராஜன் டி சில்வா.

★ ஜஸ்ட் இன் ரைம் - மேஜர் ஜெனரல் நிஹால் மாரம்பே.

★ நெயில் செனவிரத்ன - தேசிய வர்த்தக சம்மேளனம். (ம-3)

## கொழும்பு நகர் காவலுக்கு 1,230 விசேட குழுக்கள்!

கொழும்பு,மே16

கொழும்பு நகரின் பாதுகாப்புக்கும் குற்றச் செயல்கள் ஒழிப்புக்கும் என ஆயிரத்து 230 விசேட பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படும்.

ஒரு குழுவுக்கு 10 பேர் நியமிக்கப்படுவர். இதில் 8 பேர் பொதுமக்களாகவும் 2 பேர் பொலீஸாராகவும் இருப்பர்.

நகரிலுள்ள பாதாள உலகக் கோஷ்டிகள், போதை வஸ்துகள், வழிப்பறிகள், ஏனைய குற்றச் செயல்கள் ஆகியவற்றை ஒழிப்பதே இக் குழுக்கள் அமைக்கப்படுவதன் நோக்கமாகும். (ம)

# பல்கலைக்கழகங்களில் நிதி நெருக்கடி; மூடிவிடும் அபாயம் ஏற்படலாம்

நிதி நெருக்கடியால் பல்கலைக் கழகங்களில் நிர்வாக நடவடிக்கைகளில் நெருக்கடிகள் தோன்றியுள்ளன. போதியளவு நிதி கிடைக்காவிட்டால் எதிர்வரும் மாதங்களில் சில பல்கலைக்கழகங்களை மூடிவிடும் நிலை ஏற்படலாம் என்ற அபாய அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

நாவல திறந்த பல்கலைக்கழகத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற உபவேந்தர்களின் கூட்டமொன்றிலேயே இந்த அபாய அறிவிப்பு விடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்களின் நிதி நெருக்கடி குறித்து உடனடியாக திறைசேரியுடன் பேச்சு நடத்துவதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழகங்களில் நிர்மாண, திருத்த வேலைகளுக்கென ஒதுக்கப்படும் பணம் புதிய வரவு - செலவுத் திட்டத்தில் முற்றாக வெட்டப்பட்டிருப்பதோடு சம்பளம் உட்பட நாளாந்த அலுவல்களுக்கான நிதி 30முதல் 40 சதவீதம்வரை குறைக்கப்பட்டிருக்கிறது. இதனாலேயே இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் ருகுணு பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டட நிர்மாண மற்றும் ஏனைய சேவைகளுக்காக தனியாருக்கும், நிறுவனங்களுக்கும் சுமார் 7 கோடி ரூபாவை பல்கலைக்கழகம் செலுத்த வேண்டியிருக்கிறது என்று அறியப்படுகிறது.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக நூலகத்துக்கு வருடாந்தம் ஒனறரைக் கோடி ரூபா ஒதுக்கப்படுகின்ற போதிலும் இம்முறை 20 லட்சம் ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

களனி பல்கலைக்கழகம் மாணவர்களுக்கென வாடகை அடிப்படையில நடத்திவரும் விடுதிகளுக்கு வாடகைப் பணம் செலுத்தப்படாததால் விடுதி உரிமையாளர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. (ம)

## வீடுகள் கையளிப்பு

தென்மராட்சி,மே16

மிருசுவில் உசன் பகுதியில் படையினர் தங்கியிருந்த பதினெட்டு வீடுகளில் பத்து வீடுகளை அந்தந்த வீட்டு உரிமையாளர்களிடம் படையினர் கையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்தும் தங்கியுள்ள எட்டு வீடுகளுக்குரிய வாடகை வழங்கப்படுமென படையினர் தெரிவித்ததாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ம-117)

# நிரந்தரக் கட்டட வசதி இல்லாததால் புதிய கற்கைநெறியை ஆரம்பிக்கமுடியாது

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்துக்கென ஒரு சொந்தமான காணியோ நிரந்தரக் கட்டடமோ இல்லாத காரணத்தால் அதன் வசதிகளை மேம்படுத்தவோ, புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்கவோ முடியாமலுள்ளது.

- இவ்வாறு நேற்று யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் நாயகம் வசந்த ஜெயசிங்க தெரிவித்தார்.

யாழ். உயர்தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிக வசதிகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் யாழ்.மாணவர்கள் தொழில் நுட்பரீதியாகவும் மற்றும் பல்வேறு வகையிலும் தம்மை வளர்த்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு சொந்தமாகக் காணி, கட்டடம் என்பவை இல்லை. இதனால் வசதிகளை மேம்படுத்தவோ, புதிய கற்கை நெறிகளை ஆரம்பிக்கவோ முடியாத நிலை காணப்படுகின்றது.

தற்போது அத்தகைய வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. காணிக் கொள்வனவிற்காக 47 லட்சம் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் காணியும் கோண்டாவில் - இருபாலை வீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நிதியினை அடுத்த வருடம் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீடு மூலம் பெற்றுக்கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் குறிப்பிட்டார்.

கட்டடம் போன்றவற்றுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி, வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை என்பனவற்றிடமிருந்து நிதியினைப் பெற திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விரிவுரையாளர் பற்றாக்குறை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போது - புதிய நியமனங்களை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. அதுவரை ஒப்பந்த அடிப்படையிலே நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் -

புதிய கற்கை நெறிகள் நிறுவனத்திற்குரிய அடிப்படை வசதிகள் பெறப்பட்ட பின்பே சாத்தியமாகும் என்றும் குறிப்பிட்டார்.

பதில் நிர்வாகப் பணிப்பாளர் நாயகம் ஹேமச்சந்திர ரணதுங்க கருத்து தெரிவிக்கையில், தகவல் தொழில் நுட்பம், சந்தைப்படுத்தல் போன்ற கற்கை நெறிகளின் பாடத்திட்டம் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளது. கணனிகள் பெற்று 'இன்ரநெற்' தொடர்புகள் ஏற்படுத்தப்படவுள்ளது. அடுத்த வருடம் உயர் தேசிய தகவல் தொழில் நுட்பம் என்ற புதிய கற்கை நெறியும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இவை அனைத்தும் இங்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படும் பட்சத்திலேயே சாத்தியமாகும் என்று குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் பரீட்சைப் பணிப்பாளர் றோகண குமார நாயக்க, வியாபார கற்கை நெறி பணிப்பாளர் டி.விக்கிரமசூரிய, உயர் தொழில் நுட்ப நிறுவன பிரதம பொறியியலாளர் டி.பி.எஸ்.அழகக்கோன், உதவிப் பணிப்பாளர் நளின் பெர்னாண்டோ, ஆய்வு உத்தியோகத்தர் சிட்னி பெரேரா ஆகியோரும் யாழ் உயர் தொழில்நுட்ப விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர். (ம-13-10-48)

# அபிவிருத்தி அமைச்சின் கீழேயே வெளிநாட்டு உதவித் திட்டங்கள்

கொழும்பு,மே16

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் சகல வெளிநாட்டு உதவித் திட்டங்களும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

புதிய நிர்வாக அமைப்புக்கு ஏற்றவாறு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று மத்திய பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இதுவரை இத்திட்டங்களை மாகாண அமைச்சுக்களும் ஏனைய நிறுவனங்களும் நடைமுறைப்படுத்தி வந்தன.

கண்டியில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகள் குழுவின் விசேட கூட்டத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார் என்று செய்திகள் கூறுகின்றன. (ம)

# வெங்காயம் பயிரிட கடன் உதவி

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வெங்காயச் செய்கையை ஊக்குவிப்பதற்காக விவசாயிகளான சங்க உறுப்பினர்களுக்கு கடனுதவி வழங்குவது என்று தீர்மானித்துள்ளது.

இக்கடனைப் பெறவிரும்பும் விவசாயிகள் தத்தமது பிரிவு கிளையூடாக தலைமைச் சங்கத்துக்கு விணணப்பிக்கவேண்டும் என்று சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (க-135)

உ

மிருசுவில் வடக்கு, மன்னன் குறிச்சி

## நெல்லிக் கிணற்றடி கந்தசுவாமி கோயில்

## வருடாந்த மகோற்சவம்

நாளை (17-05-2002) வெள்ளி முற்பகல் 10 மணி - கொடியேற்றம்
25-05-2002 சனி முற்பகல் 10.30 மணி - இரதோற்சவம்
26-05-2002 ஞாயிறு முற்பகல் 10.30 மணி - தீர்த்தோற்சவம

மகோற்சவ பிரதமகுரு:- சிவஸ்ரீ அ.திருஞானசம்பந்தக் குருக்கள்
(உடுப்பிட்டி, துவாறி விநாயகர் அம்பாள் ஆலய பிரதம குரு)
ஆலய பிரதமகுரு:- சிவஸ்ரீ சி.நீலகண்டக் குருக்கள்
சதாகாசிரியர்:- சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள்
(யாழ். கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயம்)
ஆலய அர்ச்சகர்:- சிவத்திரு. வெ.ராசன் ஐயா

(3783) திரு.சி.கனகரத்தினம - தர்மகர்த்தா

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 - 08 - 1937

இறப்பு 19 - 05 - 1999

## அமரர் சின்னக்குட்டி பரராஜசேகரம்

(உரிமையாளர், சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்)

*ஆண்டுகள் மூன்று கடந்தாலும்*
*உங்கள் நினைவு எமை வாட்டும்.*
*கலங்கரை விளக்காய் நீங்கள் வாழ்த்தும்*
*காவியமாய் எம்மனதில் வாழ்ந்திடுவீர்!*

- குடும்பத்தினர்

*சேகர் சவுண்ட் அன்ட் மியூசிக்,*
*இல.06, கடுக்காயடி லேன்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(3781)

# யாழ்நகரில் புடவைக் கடையில் திருட்டு!

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.நவீன சந்தை மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள 'மகாநதி புடைவையகத்தில்' கடந்த சனிக்கிழமை இரவு பல லட்சம் ரூபா பெறுமதிமிக்க உடுபுடைவைகள் களவாடப்பட்டுள்ளதாக யாழ். பொலீஸ நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை கடையைப் பூட்டிவிட்டுச் சென்றதாகவும் பின்னர் திங்கட்கிழமை அதிகாலை வந்து பார்த்தபோது கடையில் இருந்த புடைவைகள் திருடப்பட்டிருந்தன என்றும் கடை உரிமையாளர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ம-9-15)

# நாரந்தனைத் தாக்குதல் வழக்குவிசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே16


கடந்த வருடம் நவம்பர் மாதம் 28ஆம் திகதி நாரந்தனையில் வைத்துத் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் பிரமுகர்கள்மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது, இரண்டாவது சந்தேக நபரான நாடாளுமன்ற உறுப்பினர் ந.மதனராஜா மன்றுக்குச் சமுகமளிக்காத காரணத்தால் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்வதற்காக அவர் கொழும்பில் தங்கியிருப்பதாக மன்றுக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ச.இளங்கோவன் வழக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெற்ற வழக்கு விசாரணை பின்பு நேற்றுமுன்தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-10)

உ

மெய்யடியார்களின் தீவினைகளை அகற்றத் தேரேறிவரும் பரராசசேகரப் பெருமான் நாட்டில் சாந்தியும், சமாதானத்தையும், சுபீட்சத்தையும் அருள்வதோடு, தமிழ் மக்கள் சுயகௌரவத்துடனும், உரிமையுடனும் வாழ அருள்பாலிப்பாராக.



**அண்ணா தொழிலகம், இணுவில்.**

(C/22143) *T.P.No: 3565*

# இதோ! இதோ!!

## லாலா சோப், சன்சைன் சோப்பின்

ஆரம்பகால வளர்ச்சிக்கு எமது வன்னி மண்ணில் உள்ள மக்கள் மிகவும் உறுதுணையானவர்கள். பல ஆண்டுகளுக்குப் பிறகு எமது உற்பத்தியை மிகவும் பெரும் சிரமத்தின் மத்தியில் சந்தைப்படுத்த முன்வந்திருக்கின்றோம். ஆகவே, தொடர்ந்தும் எமது சிறுகைத்தொழில் உற்பத்திக்கு முழுமையான ஆதரவும், ஒத்துழைப்பும் வழங்குவீர்களானால் லாலா சோப், சன்சைன் சோப்பை எமது மண்ணில் முன்னிலைக்குக் கொண்டுவரமுடியும். சில வறுமைக் கோட்டில் உள்ள இளைய தலைமுறைகளுக்கு எம்மால் வேலைவாய்ப்பு வழங்கமுடியும்.

**லாலா சோப் தொழிற்சாலை**

அச்சுவேலி. (C/22122)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## சபிண்டீகரண அழைப்பும்



ஜனனம் 1934 ❖ 11 ❖ 01

மரணம் 2002 ❖ 04 ❖ 17

## அமரர் செல்லையா மகாதேவா

**அன்போடும் பண்போடும் எம்முடன் வாழ்ந்தீர்!**
**எந்நாளும் உம் நினைவு எம் மனதை விட்டு அகலாது!!**
***ஆத்மா சாந்தி பெற ஸ்ரீவேங்கடவரனை வேண்டுகிறோம்.***

எமது அன்புச் சகோதரரின் அந்தியேட்டிக் கிரியைகள் *இன்று (16.05.2002) வியாழக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையில் நடைபெறும். 17.05.2002 வெள்ளிக்கிழமை அன்னாரது சகோதரரது இல்லத்தில் நிகழ்கின்ற சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும* கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*229,நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (3756)

N.C. இரமணீசன்,
V.N.C. நாராயணசாமி
(சகோதரர்)

## மீண்டும் யாழ் நகரில்...

# Coca Cola

## இன்று முதல் 16.05.2002

**COCA COLA**
**FANTA**
**SPRITE**
**PORTELLO**

எம்மிடம் தாராளமாகப் பெற்றுக்கொள்ளலாம், என்பதை எமது வாடிக்கையாளர்கள் சகலருக்கும், மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# SriMurugan

303, K.K.S Road, Jaffna.
T.P:021-2670

# கருத்தரங்கும் கலந்துரையாடலும்

**விவசாயத்துறையின் உள்ளீடுகளான விவசாய இரசாயனம், பயிர்விதைகள், விவசாய இயந்திரங்கள், மிருக வைத்தியப் பொருள்கள் என்பவற்றின் புதிய தொழில்நுட்பத் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதன்மூலம் யாழ்.மாவட்டத்தின் விவசாயத் துறையை மீண்டும் முன்னேற்ற வழிசெய்வோம்.**

*இது தொடர்பான கருத்தரங்கு யாழ்நகரில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*

*இடம்:* **மாவட்ட விவசாய பயிற்சி நிலையம், திருநெல்வேலி.**

*காலம்:* **2002.05.18 மு.ப.9.00 மணிமுதல் பி.ப.3.00 மணிவரை.**

**இந்நிகழ்வுக்கு விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல்துறையின் சகல தரப்பினரையும், விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் கமநல சேவைகள் திணைக்களத்தின் சகல பெரும்பாக உத்தியோகத்தர்களையும், யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தின் விரிவுரையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.**

**ஹேலீஸ் அக்ரோ புரொடெக்ட்ஸ் லிமிட்டெட்,**
**கொழும்பு - 10.**

(சி-22125)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே16

யாழ்ப்பாணம் இராஜ வீதி, ஸ்ரீ சக்திவேல் முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 7 மணி முதல் 8 மணிவரை தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ஒ-4)

★ ★ ★

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு நாள்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி காலை 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(ஒ-4)

★ ★ ★

தென்மராட்சியில் பழைமை வாய்ந்த உசன் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி காலை 8.30மணிக்குத் தேர் உற்சவமும் மறுநாள் காலை 6 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (117)

★ ★ ★

சுன்னாகம், மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீவிஸ்வநாதசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (எ-10)

★ ★ ★

தொல்புரம், கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், 27ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.(எ-28)

★ ★ ★

இருபாலை, வேளாதோப்பு ஸ்ரீபால சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (எ-10)

★ ★ ★

கந்தரோடை அருளானந்த விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது. 25ஆம் திகதி முற்பகல் 11மணிக்கு தேர்த்திருவிழாவும் 26ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-152)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி காலை 7மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலயத்தின் பிராயச்சித்த கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை மாலை 3மணிக்கு இடம்பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ஜ-17)


நிறைஞ்சனாஸ் சங்கானை
LEONARD DIC APRIO
KATE WINSLET
டைட்டானிக் (தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22147)



இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய
தீர்த்தத் திருவிழா
காலம் : நாளை (17.05.2002) வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 4.00 மணி
- உபயகாரர்கள்.
(3799)



தேவை
யாழ்நகரில் இயங்கும் மொத்த விற்பனை நிலையத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.
1. விற்பனைப் பிரதிநிதி (Sales Representative)
2. விற்பனை உதவியாளர் (Sales Assistance)
3. இலிகிதர் (Clerk) (இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.)
விண்ணப்பங்கள் யாவும் சுய கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 25.05.2002இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.
அனுப்பவேண்டிய முகவரி: விளம்பர இலக்கம் - 1519, மே/பா உதயன்.
(3801)


## மீனவர் சங்க பிரதிநிதிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,மே16

வலி.மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்களை இன்று காங்கேசன்துறைக்கு வருமாறு கடற்படையினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் கடற்றொழில் புரிவதற்கான நேரம், தூரம் பற்றிய விடயங்கள் மற்றும் மீனவர்களின் பிரச்சினைகள் பற்றிக் கேட்டறிவதற்கே இன்று காலை 9 மணிக்கு காங்கேசன்துறைக் கடற்படை முகாமிற்கு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-12-ரி)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே16

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தினால் அமரர் டாக்டர் சிவகுரு ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்துக்காக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் கழகங்களின் விவரம் வருமாறு:-

★ வல்வெட்டி கலைமதி வி.க. எதிர் ஊரெழு றோயல் வி.க.

★ கரவெட்டி கலட்டி வி.க. எதிர் அச்செழு வளர்மதி வி.க. (ஜ-86)

☆ ☆ ☆

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் தடகளப் போட்டிகளின் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஜ-ரி)


ராஜா யாழ்ப்பாணம்
5ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/22146)



நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
சரத்குமார், அபிராமி, முரளி, மனோஜ் நடித்த
சமுத்திரம் (பிலிம்ஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
(3794)



தேவை
அளவெட்டி, மல்லாகம் நிறுவனங்களில்
❖ தரம் 1 - 5 வரை ஆசிரியர்கள் தேவை.
❖ ஆங்கில ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு: சைன் உடுவில்.
(3804)



மாணவர்களே!
லாலா சோப்
ஸ்தாபனத்தாரின் போட்டியில் பங்குகொள்பவர்கள்
லாலா சோப், சன்சயின் சோப் எதுவாக இருப்பினும் 5 மேலுறைகள் சேர்த்து அனுப்பவும்.
லாலா அச்சுவேலி.
(C/22067)



உ
மாவை கொல்லங்கலட்டி
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
வசந்த மஹோற்சவப் பெருவிழா
17-05-2002 வெள்ளிக்கிழமை 12 மணி - கொடியேற்றம்
24-05-2002 வெள்ளிக்கிழமை மாலை - சப்பரத் திருவிழா
25-05-2002 சனிக்கிழமை பகல் - தேர்த் திருவிழா
மறுநாள் பகல் 11 மணி - தீர்த்தம்
27-05-2002 திங்கள் - பிராயச்சித்தம்
ஸ்ரீ வைரவர் மடை பொங்கல்
தினமும் காலை பஸ் மூலம் அடியார்கள் தெல்லிப்பழை தடை முகாமிலிருந்து அழைத்துச் செல்லப்படுவர்.
தினமும் அன்னதானம் நடைபெறும்.
(C/22156)
- அறங்காவலர்.


# மரண அறிவித்தல்கள்

## சிங்கராயர் சூசைப்பிள்ளை

யாழ்ப்பாணம், 2ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சி.சூசைப்பிள்ளை அவர்கள் 14.05.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றெஜினா மற்றும் புஸ்பராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, அந்தோனிப்பிள்ளை, பரஞ்சோதி மற்றும் திரேசம்மா, திருச்செல்வம், யேசுதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மயில்வாகனம் (ஓய்வுபெற்ற P.H.I.), ரத்னஜோதி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் டொனால்ட் சுதேஷ் (N.H.D.A.), பேனாட் ரமேஷ் (B.A.), மாலினி (ஆசிரியை, O.L.R.), நிறூசா, சர்மிலி, மடோனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் இன்று (16.05.2002) வியாழக்கிழமை பி.ப. 3.00மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*219, 2ஆம் குறுக்குத்தெரு,*
*யாழ்ப்பாணம்.* (3805)

தகவல்: புஸ்பராணி (மகள்)

## கோணர் கந்தையா

வரணியைப் பிறப்பிடமாகவும் முள்ளியான் மிருசுவிலை வதிவிடமாகவும் தற்போது சுண்டுக்குளியில் வசித்தவருமான கோணர் கந்தையா அவர்கள் 13.05.2002 திங்கள் சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணர், அபிராமிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, வள்ளிப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் சரஸ்வதி, புனிதவதி, தயாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராஜா, முத்துக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் தியாகினி, தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மாணிக்கம், மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னப்பிள்ளை காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மாணிக்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2002) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*33,2ஆம் விதானை ஒழுங்கை,*
*சுண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்,* (3800)

தகவல்: திருமதி சரஸ்வதி தியாகராஜா (மகள்)

## வெலிச்சோர்ப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
### (அண்ணாவியார்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் விவாகமாகியபின் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அண்ணாவியார் வெ.அந்தோனிப்பிள்ளை நேற்று (15.05.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற மேரி யோசேப்பினின் (நேசம்) அன்புக் கணவர்.

திரு.ஏ.யே.சவுந்தரநாயகம் (சந்திரன்) (யா/கென்றியரசர் கல்லூரி, இளவாலை), திருமதி புஸ்பராணி வில்லியம்ஸ் (அமெரிக்கா), திரு.ஏ.யே. மகேந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தை.

இந்திரா, வின்சென்ற் வில்லியம்ஸ் (அமெரிக்கா), பாமா மகேந்திரன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனார்.

அனபாயன், நேசி, ஆனந்தன், அர்ச்சுதன், அருள்கிருபா ஆகியோரின் பேரன்.

திருமதி றோசலின் அருமைநாதர், இரசேந்திரம், வில்லியம் (இளைப்பாறிய அதிபர்), அல்பிறட் ஆகியோரின் சகோதரர்.

இவர்தம் பூதவுடல் நாளை (17.05.2002) வெள்ளிக்கிழமை காலை 8.00-மணிவரை மூத்ததம்பி லேன், மானிப்பாய் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கல்லூரி வீதி, இளவாலையில் அவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அன்று மாலை 3.00 மணிக்கு இளவாலை புனித ஆனாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.* (3807)

தகவல்: ஏ.யே.சவுந்தரநாயகம் (சந்திரன்) (மகன்)

# நினைவலைகள்

| இருபத்தைந்தாவது ஆண்டு நினைவு | | | முப்பத்தோராம் நாள் நினைவு | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் 1920 - ஏப்ரல் - 23 |  | மறைவு 1977 - நவம்பர் - 03 | தோற்றம் 1920 - ஏப்ரல் - 25 |  | மறைவு 2002 - ஏப்ரல் - 16 |

டாக்டர் விசுவநாதர் ஆறுமுகம் கனகசிங்கம் — திருமதி கமலாசனி கனகசிங்கம்

எம்மை மாண்புடன் வாழவைத்த மனிதத் தெய்வங்களின் மலரடிகள் சரணம்.

*108,புங்கன்குளம் வீதி.*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர்.

(C/22154)

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழான அனைத்து வழக்குகளும் வாபஸாகும்

## சட்டமா அதிபர் கமலசபேசன் தகவல்

கொழும்பு,மே16

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்களுக் கெதிராகத் தாக்கல் செய்யப்பட்ட எல்லா வழக்குகளும் மிகவிரைவில் வாபஸ் பெறப்படும்.

சட்டமா அதிபர் கே.சி.கமலசபே சன் இந்தத் தகவலைத் தெரிவித்துள் ளார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான பல இளைஞர்கள் அவர்கள்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டுள் ளார்கள் எனவும் சட்டமா அதிபர் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதானவர்களில் 130இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் என நாடாளு மன்றத்தில் அமைச்சர் ஒருவர் கருத் துத் தெரிவித்துள்ளார்.

இதில் உண்மை இல்லையென் றும், ஒரு சிலரே விடுதலை செய்யப் பட்டுள்ளார்கள் என்றும் சில சட்டத் தரணிகள் குறைபட்டுக் கொள்கின்ற னர்.

இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று சட்டமா அதிபரிடம் கேட்ட போது, சட்டமா அதிபர் பின்வருமாறு பதிலளித்தார்:-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் சிலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே அவர் கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்ப டாத காரணத்தால் விடுதலை செய் யப்பட்டுள்ளார்கள். எனவே, அவர் களையும் சேர்த்துக்கொண்டால் அமைச்சர் தெரிவித்த எண்ணிக்கை சரியாக இருக்கலாம் - என்று சட்டமா அதிபர் தெரிவித்தார்.

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு நீண்டநாள் களாக நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இளை ஞர்கள் குறித்த தங்கள் நிலைப்பா டென்ன?

இப்படிச் சட்டமா அதிபரிடம் கேட்டபோது -

குடிவரவு, குடியகல்வுச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற தல்ல. கடவுச்சீட்டில் மோசடி செய்வ தென்பது ஒரு பாரிய குற்றம், குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்குப் போலிப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதும மன்னிக்க முடியாத குற்றம். எனவே, குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு அவர்கள்மீது தொடரப்படும் வழக்குகளை நாம் வாபஸ் பெறமாட்டோம் என்றார் சட்டமா அதிபர்.

கடவுச்சீட்டில் மோசடி செய்தவர் கள் தாங்கள் அல்லர். ஏஜெண்டுமார் என்றல்லவா கைதானவர்கள் கூறுகி றார்கள் என்று சட்டமா அதிபரிடம் சுட்டிக்காட்டியபோது கடவுச்சீட்டுக்கு உரியவர்கள் ஏஜெண்டுமார்மீது முறைப்பாடு செய்து, அது உண்மை என்று காணப்பட்டால் ஏஜெண்டுமார் மீது வழக்குத் தொடரப்படும். முறைப் பாடு செய்தவர்கள் விடுதலை செய் யப்படுவர் - என்றார் சட்டமா அதிபர். (ஐ)

## சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,மே16

யாழ். புறநகர்ப்பகுதியில் நேற்று சுவரொட்டிகள் காணப்பட்டன.

இராணுவத்துடனோ, இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனோ தொடர்பு வைத்து தமிழினத்தைக் காட்டிக் கொடுக்க முற்படுபவர்களை வரலாறு மன்னிக்காது என்ற வாசகங்கள் அவற்றில் காணப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழகப் பிரதேசம, கந்தர்மடம் போன்ற பகுதிகளில் இச் சுவரொட்டிகள் அதிக அளவில் காணப்பட்டன. (ஐ-12)

## தெற்கில் ஜே.வி.பியினர் வீடுவீடாகப் பிரசாரம்

கொழும்பு,மே16

அரசின் சமாதான முயற்சிகளை முறியடிப்பதற்கு மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்று கேட்டு ஜே.வி.பி. வீடு வீடாகச்சென்று பிரசாரங் களை மேற்கொண்டு வருகிறது. (ஐ-4)

## Z ஸ்கோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்களைத் தெரிவுசெய்வதற்கு பழைய சனத்தொகை வீதமே பயன்படுத்தப் பட்டுவருகிறது.

★ யாழ்.மாவட்டத்துக்கு பின்தங் கிய மாவட்ட கோட்டா முறையிலும் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள் ளனர் -

இடம்பெயர்ந்து ஏனைய மாவட் டங்களில் வசிக்கும் யாழ். மாவட்ட மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக் குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவற்றின் மூலம் யாழ். மாவட் டத்தில் இருந்து கூடுதலான மாணவர் கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தெரிவுசெய்யப்பட வாய்ப்பு உள்ளது.

இதேவேளை -

வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் மன்னார் மாவட்டம் கல்வி வளர்ச்சியில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு அடுத்த நிலையில் வவுனியா மாவட்டம் உள் ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்துக்கும் விசேட பாடத்துறை களுக்கும் நாம் புதிதாக மாணவர் களை அனுமதிக்கத் திட்டமிட்டுள் ளோம்.

இந்தத் திட்டத்தின்படி விசேட அனுமதியின் கீழ் மாணவர்கள் யாழ். பல்கலைக் கழகத்துக்குள் உள்வாங் கப்படுவர்.

- இவ்வாறு துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (ஐ-6-9)

### முகமாலை ஊடான பயணம்

## நேரமாற்றம் தொடர்பாக செஞ்சிலுவைக்கு தகவலில்லை!

யாழ்ப்பாணம்,மே16

ஏ-9 கண்டி வீதியில் முகமாலை சோதனை நிலையம் ஊடாகப் பொது மக்கள் அதிகாலை 6 மணிமுதல் மாலை 5மணிவரை பயணத்தை மேற்கொள்ளலாம் என்று யாழ். பாது காப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்துள்ளது.

சோதனை நிலையத்தில் புலிக ளின் பிரதேசத்துக்கும் படையினரின் பிரதேசத்துக்கும் இடையில் சூனியப் பிரதேசத்தில் பணியாற்றும் செஞ்சிலு வைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் இது குறித்து தமக்கு எதுவும் அறி விக்கப்படவில்லை என்று தெரிவித் துள்ளனர்.

படையினரின் இந்த அறிவிப்புத் தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதே சக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதி நிதியிடம் நேற்று மாலை கேட்ட போது -

"போக்குவரத்து நேர மாற்றம் குறித்து எந்த அறிவிப்பும் எமக்கு வரவில்லை. வழமைபோன்று காலை 8மணிமுதல் மாலை 5மணி வரையி லான காலப்பகுதியில் எமது பணி இடம்பெறும்" என்று பதில் அளித்தார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பிரதிநிதி யிடம் கேட்டபோது -

நேரமாற்றம் குறித்து எமக்கு எதுவித அறிவித்தலும் வரவில்லை. வழமையான நேரத்துக்கே போக்கு வரத்து இடம்பெறுகின்றது - என்றார். (ஐ-3)

(மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்)


**இன்று**



யுத்தம் ஓய்விற்கு வந்த வேளையிலும் நாம் சில விடயங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது....

A Lecture on

**Humanitarian issues in Post Conflict Situation**

by:
Dr.Soeren Buus Jensen MD, Ph.D.
*together with*
Dr.Nancy Baron
(UNICEF & TPO Consultants in Post Conflict Situation around the globe)

16.05.2002
வியாழக்கிழமை
3.00 மணி (பி.ப.)
நூலகக் கேட்போர் கூடம்
யாழ்.பல்கலைக்கழகம்

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

உளமருத்துவத்துறை சாந்திகம்



**கொம்பியூட்டர் விற்பனைக்கு**
I.P.M. கொம்பியூட்டர், பிறின்ரர் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
சீ.ஞானசேகரம் (மனைவி - உசா)
மூன்று கோயில் வீதி,
அன்னங்கை,
உரும்பிராய் மேற்கு. (3788)




எமது புதிய
வீடியோ CD வெளியீடு
குணால், மனோஜ் நடித்த
வருசமெல்லாம் வசந்தம்
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/22155)



**விக்னா கல்வி நிறுவனம்**
பிரிவு - 5
O/L DAY CLASS (8.30 - 2.00)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
பழைய பாடத்திட்ட வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பமாகிவிட்டது.
விடுதி வசதி செய்து கொடுக்கப்படும். (3803)



MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS
COMPUTER SERVICE
Computer Repairs
Computer Service
Computer Maintenance
உங்கள் Computer இல் ஏதும் பிழைகள் இருப்பின் எங்களை அழையுங்கள்
MICRO PC SYSTEMS
No.9, Modern Market, Hospital Road, Jaffna.
Tel:021-2067
www.mipaq.com
(C/21353)
MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS - MICRO PC SYSTEMS



வலி.வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக நேற்று நடந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்குகொள்வதற்காக வந்திருந்தோரை மேலேயுள்ள படங்களில் காணலாம்.

### மட்டக்களப்பில் நேற்று

## புலிகள் இயக்கத் தளபதிகளுடன் கண்காணிப்புக் குழுவினர் சந்திப்பு

மட்டக்களப்பு,மே16

மட்டு - அம்பாறை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலி களின் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடு தலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான போரதீவில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பில் சிறப்புத் தளபதி கேணல் கருணா, பிராந்திய அரசியல்துறை சிறப்புப் பொறுப்பாளர் கரிகாலன், பிராந்திய அரசியல்துறை மகளிர் அணிப் பொறுப்பாளர் பாணுகா ஆகியோர் கலந்துகொண்டனர்.

யுத்தநிறுத்த மீறல்கள் தொடர் பான முறைப்பாடுகள், யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்தலில் ஏற் பட்ட முன்னேற்றங்கள், நடைமுறைச் சிக்கல்கள் என்பன தொடர்பாக அப் போது ஆராயப்பட்டது. (ஐ-4)

## புலிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பிரதிநிதிகள் படையினரிடம் கோரி னர். கடந்த முறை இடம்பெற்ற சந்திப பின்போது இணக்கம் காணப்பட்ட வாறு ஓமந்தை ஊடான போக்கு வரத்தை காலை 7.30மணிக்கு ஆரம் பிக்க படையினர் நடவடிக்கை எடுக் காதது குறித்து புலிகள் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

கண்டி வீதி ஊடான மக்களின் போக்குவரத்தை இலகுவாக்குவதற் கான வழிவகைகள் குறித்து நேற் றைய சந்திப்பில் இருதரப்பினரும் கலந்துரையாடினர். (ஐ-3-4)

## ஆயிரத்துக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தின.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் உட்படப் பலர் நேற்றைய மக்கள் போராட்டத் தில் பங்கேற்றனர்.

உண்ணாவிரதத்தின் முடிவில் நடந்த கூட்டத்தில் பலரும் உரையாற் றினர்.

யாழ் அரச அதிபர், படை அதிகாரி கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் னர் வலி.வடக்கு பிரதேச செயலகத் தில் ஒன்றுகூடித் தமது கோரிக்கை குறித்து ஆராயவேண்டும் என்றும்-

மீளக்குடியமர்வதற்கான கால அவகாசம் ஒன்றை முடிவு செய்து அறிவிக்கவேண்டும் என்றும் -

வலி.வடக்கு புனர்வாழ்வுக் கழகத தலைவர் எஸ்.பரமநாதன் அங்கு தெரி வித்தார்.

அவ்வாறு கால அவகாசம் வழங்கா விட்டால் மீளக்குடியமர அனுமதிக் கும்படி கோரி தொடர்போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் அவர் எச்சரித் தார்.

இதேவேளை - வலி.வடக்கு பிர தேச செயலகப் பணிகள் வழமைபோல் நேற்று இடம்பெற்றன. (ஐ-3-8-86)

## மீன்பிடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்புக் குழுவின் வெளிநாட்டு உறுப்பினர்கள் நேற்று பலாலியில் படை அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினர். ஜோன்சன் பிக் லண்ட், ஹெல்ஜ் சைவர்ஸன் ஆகி யோரே படை அதிகாரிகளைப் பலா லியில் சந்தித்தனர்.

தற்போது தளர்த்தப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை எதிர்வரும் 24ஆம் திகதி முதல் முற்றாக நீக்குவதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டி ருப்பதாகவும் -

அவை தொடர்பாக படைத் தலை மையகத்தில் இருந்து அடுத்தவாரம் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியி டப்படும் என்றும் -

படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்ட தாக அறியவந்தது.

அரசு - . புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி -

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வரும் நாளில் இருந்து மீன்பிடித்தல் தொடர் பான கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்படும். யுத்தநிறுத்தம் நடை முறைக்கு வருகின்ற நாளில் இருந்து தொண்ணூறு நாள்களுக்குள் கீழ்க் காணும் விதிவிலக்குகளுக்கு அமை வாகப் பகலிலும் இரவிலும் மீன்பிடிப் பதில் உள்ள அனைத்துக் கட்டுப்பாடு களும் நீக்கப்படவேண்டும்.

★ கரையோரங்களில் பாதுகாப்புப் படைமுகாம்களின் இரு பக்கமும் ஒவ்வொரு கடல் மைல் தூரத்துக் குள்ளும் கடற்பக்கமாக இரண்டு கடல் மைல் தூரத்திற்குள்ளும் மீன் பிடித்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

கரையோரமாக உள்ள துறைமுகங் களுக்குள்ளும் துறைமுக வாயில்களி லும் குடாக்கடலிலும் முகத்துவாரங் களிலும் மீன்பிடித்தல் அனுமதிக்கப் படமாட்டாது. (ஐ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.